S.M.C

பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

அசல் 22 கரட் தங்க
நகைகளுக்கு யாழ் நகரில்
சிறந்த ஸ்தாபனம்
**அர்ச்சனா**
**ஜுவலர்ஸ்**
118, கஸ்தூரியார் வீதி
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-2127)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஆவணி 03 ஞாயிற்றுக்கிழமை (19.08.2001) தொலைபேசி: 3378 ஒலி : 25

## வடபகுதியில் குண்டுவீச வந்த
# மிக் 27 ரக யுத்த விமானம்
# வீழ்ந்து நொருங்கியது!

## உக்ரைன் நாட்டு விமான ஓட்டி பலி;
## 7 பொதுமக்கள் காயம்; 3 வீடுகள் தரைமட்டம்

(நமது நிருபர்)

இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான 'மிக் 27' ரக குண்டு வீச்சு விமானம் ஒன்று கட்டுநாயக்கா விமானப் படைத்தளத்திற்கு அருகாமையில் நேற்றுக் காலை 11.20 மணியளவில் விழுந்து வெடித்துச் சிதறி எரிந்து நாசமாகியது.

இதன் போது விமானத்தை ஓட்டி வந்த உக்ரைன் நாட்டு விமானி உடல் சிதறிப் பலியானார் விமானத்தின் பெறுமதி 2.5 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

இந்த விமானம் குடியிருப்பு பகுதியில் வீழ்ந்து நொறுங்கியதால் 7 பொது மக்கள் காயமடைந்த நிலையில் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் மூவர் எரிகாயங்களால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இருந்து முற்பகல் 11.18 க்குப் புறப்பட்ட இந்த விமானம் புறப்பட்ட இரண்டு நிமிடத்தில் 11.20 மணியளவில் நீர்கொழும்பு-கொழும்பு வீதியில் பொறளைச் சந்திக்கும், கட்டுநாயக்கா வீதிக்கும் இடையில் உள்ள குடியிருப்புகள் மீது வீழ்ந்து நொறுங்கியது.

விமானம் வீழ்ந்ததினால் அருகில் இருந்த இரண்டு கடைகளும், மூன்று வீடுகளும் தரைமட்டமாகியது.

(8ஆம் பக்கம் பார்க்க)

## விமானம் வீழ்ந்து சிதறியதை நேரில் கண்டேன்
### பொலிஸ் அத்தியட்சகர் தகவல்

நானும் எனது சாரதியும் வாகனத்தில் கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த போது திடீரென பாரிய சத்தத்துடன் விமானம் ஒன்று நிலைக்குத்தாக வந்துகொண்டிருப்பதைக் கண்ட சாரதி விமானம் விழப்போகிறது என்று சொல்லி முடிப்பதற்குள் விமானம் நிலத்தில் வீழ்ந்து வெடித்துச்சிதறி எரிந்தது என்று நேரில் கண்டதாக நீர்கொழும்பு பொலிஸ் அத்தியட்சகர் கே. அரசரட்ணம் தெரிவித்தார். அச்சம்பவம் பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்

(8ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்திற்கு புதிய தளபதி

யாழ். மாவட்டத்தின் புதிய இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் டி எஸ் கே விஜேசூரிய கடந்த வெள்ளிக்கிழமை முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ் மாவட்ட இராணுவத் தளபதியாகவிருந்த மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால ஒருவருடப்பயிற்சியின் பொருட்டு சீனாவுக்குச்செல்லவுள்ளதால் இவருக்குப் பதிலாக மேஜர் ஜெனரல் டி எஸ் கே விஜேசூரியா யாழ் மாவட்ட இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். (வ)

## மருசென்ற வாகனங்களின் உதிரிப்பாகங்கள் அதிக விலை போனது

(வவுனியா)

மடுத்திருப்பதிக்கு சென்றவாகனங்களில் மேலதிகமாக இருந்த வாகன உதிரிப்பாகங்கள் இராணுவக் கட்டுப்பாடற்றவன்னிப்பகுதியில் பெருந்தொகையான பணத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(8ம் பக்கம் பார்க்க)

## இரசாயன ஆயுதக் கொள்வனவுக்கு தமிழ் எம்.பிக்கள் கண்டனம்

(கொழும்பு)

அரசாங்கம் இரசாயன ஆயுதங்களை புலிகளுக்கெதிரான யுத்தத்தில் பயன்படுத்தி தமிழர்களை கொன்றொழிக்கமுடிவு செய்திருப்பதை எதிர்க்கட்சி தமிழ் பாராளு

→08ஆம் பக்கம் பார்க்க

## உடரட்டமெனிக்கே ரயில் விபத்து
## 15 பேர் பலி; 80 பேர் காயம்

(கொழும்பு)

பதுளையில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த 'உடரட்டமெனிக்கே' ரயில் தடம்புரண்டு விபத்துக்குள்ளானதில் 15 பேர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர், 80 பேர் வரையில் காயமடைந்துள்ளனர்.

பதுளையில் இருந்து நேற்று அதிகாலை 5.55மணியளவில் ...பட்ட ரயில் அளவைப்பகுதியில் யக்கல்கொட ரயில்நிலையத்தை அண்மித்தபோது தடம்புரண்டு விபத்துக்குள்ளானது.

இச்சம்பவத்தில் உயிரிழந்த 15 பேரைத்தவிர மேலும்

## விமானம் வீழ்ந்ததற்கு புலிகளின்

னர். இவர்களில் மூவர் எரி காயங்களால் பாதிக்கப்பட்

மணியளவில் நீர்கொழும்பு-கொழும்பு வீதியில் பொற

கடைகளும், மூன்று வீடுகளும் தரைமட்டமாகியது.

(8ஆம் பக்கம் பார்க்க)

(கொழும்பு)

அரசாங்கம் இரசாயன ஆயுதங்களை புலிகளுக்கெதிரான யுத்தத்தில் பயன்படுத்தி

தமிழர்களை கொன்றொழிக்கமுடிவு செய்திருப்பதை எதிர்க்கட்சி தமிழ் பாராளு

→08ஆம் பக்கம் பார்க்க

# விமானம்வீழ்ந்துசிதறியதை நேரில் கண்டேன்

## பொலிஸ் அத்தியட்சகர் தகவல்

நானும் எனது சாரதியும் வாகனத்தில் கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த போது திடீரென பாரிய சத்தத்துடன் விமானம் ஒன்று நிலைக்குத்தாக வந்துகொண்டிருப்பதைக் கண்ட சாரதி விமானம் விழப்போகிறது என்று சொல்லி முடிப்பதற்குள் விமானம் நிலத்தில் வீழ்ந்து வெடித்துச்சிதறி எரிந்தது என்று நேரில் கண்டதாக நீர்கொழும்பு பொலிஸ் அத்தியட்சகர் கே. அரசரட்ணம் தெரிவித்தார். அச்சம்பவம் பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்

(8ம் பக்கம் பார்க்க)

# உடரட்டமெனிக்கே ரயில் விபத்து 15 பேர் பலி; 80 பேர் காயம்

(கொழும்பு)

பதுளையில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த 'உடரட்ட மெனிக்கே' ரயில் தடம்புரண்டு விபத்துக்குள்ளானதில் 15 பேர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர், 80 பேர் வரையில் காயமடைந்துள்ளனர்.

பதுளையில் இருந்து நேற்று அதிகாலை 5.55மணியளவில் கொழும்பு நோக்கிப் புறப்பட்ட ரயில் அளவைப்பகுதியில் யக்கல்கொட ரயில்நிலையத்தை அண்மித்தபோது தடம்புரண்டு விபத்துக்குள்ளானது.

இச்சம்பவத்தில் உயிரிழந்த 15 பேரைத்தவிர மேலும்

→8ஆம் பக்கம் பார்க்க

# விமானம் வீழ்ந்ததற்கு புலிகளின் ஏவுகணைத் தாக்குதலே காரணம்?

## படையினர் மத்தியில் ஊகம்

(கொழும்பு]

கட்டுநாயக்கா பகுதியில் நேற்றுக்காலை வீழ்ந்து நொருங்கிய மிக் 27ரககுண்டு வீச்சு விமானம் விடுதலைப் புலிகளின் ஏவுகணைத் தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கலாமென படைத்தரப்பினர் மத்தியில் ஊகம் வெளியாகியுள்ளது.

எனினும் இவ்விமானம் வீழ்ந்து நொருங்கியமை தொடர்பில் சரியான தகவல்கள் வெளியானபோதும்விமானப்படையினர் விமானம் இயந்திரக் கோளாறு காரணமாகவே வீழ்ந்து நொருங்கியதாக தெரிவித்துள்ளனர்.

விமானவிபத்து தொடர்பாக ஆராயவும் விசாரணைகளை மேற்கொள்ளவும் விமானப் படைத்தளபதி ஏயர் மாஷல் ஜெயலத்வீரக்கொடி தலைமையில் உயர் மட்டக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மேற்படி விமான விபத்து குறித்து விடுதலைப்புலிகள் எவ்விதமான அறிவிப்பையும் வெளியிடவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

(இ-08

# இராஜினாமாச் செய்ய அமைச்சர்சிலர்பின்னடிப்பு

(கொழும்பு)

திகதியிடப்படாத இராஜினாமாக் கடிதங்களை ஜனாதிபதி சந்திரிகாவிடம் வழங்குவதில் சிரேஷ்ட அமைச்சர்கள் மத்தியில் இழுபறி நிலை காணப்படுவதாக அமைச்சரவை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

திகதியிடப்படாத இராஜினாமாக் கடிதம் ஜனாதிபதியிடம் சமர்ப்பிப்பது தொடர்பாக போக்குவரத்து அமைச்சர் வலம்புரிக்குத் தகவல் தருகையில்;

ஜனாதிபதி கோரியதற்கு இணங்க நான் திகதியிடப்படாத இராஜினாமாக் கடிதத்தை வழங்க மாட்டேன்; அமைச்சர்களை நியமிப்பதும், விலக்குவதும் ஜனாதிபதியின் கையில் உண்டு. இந் நிலையில் அவர் என்னை அமைச்சர்

→08ஆம் பக்கம் பார்க்க

## செய்தியாளர் தாக்கப்பட்டார்

(கொழும்பு)

நேற்று இடம் பெற்ற விமான விபத்துச் சம்பந்தமான செய்திகளைச் சேகரிக்கச் சென்ற ஏ.எப்.ரி. செய்தி நிறுவனத்தைச் சேர்ந்த உதய வீரசிங்க என்பவர் விமானப் படை அதிகாரிகளால் தாக்கப்பட்டார்.

செய்தி ஊடகத்தில் பணிபுரிவதற்கான தனது அடையாள அட்டையைக் காட்டிய போதிலும் இவர் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ந-4)

# யாழ்.மா.சபையின் இந்துவிடுதி மீது இளைஞர்கோஷ்டி நேற்று கல்வீச்சு

## கூரைகள் சேதம்; அறிவிப்புப் பலகை நாசம்

(யாழ்ப்பாணம்)

நல்லூரில் அமைந்துள்ள யாழ். மாநகரசபையின் இந்து விடுதிக் கட்டடம் நேற்றிரவு இளைஞர் கோஷ்டியின் கல் வீச்சினால் சேதம் அடைந்தது.

மேற்படி சம்பவம்பற்றி மேலும் தெரியவருவதாவது, மாநகரசபையால் அங்கீகரிக்கப்படாத இடத்தில் நேற்று மாலை கச்சான் விற்பனையில் ஈடுபட்டிருந்த வயோதிப மாது ஒருவரின் கச்சானை மாநகர உத்தியோகத்தர் ஒருவர் நிலத்தில்கவிழ்த்து கொட்டினார். இச்சம்பவத்தால் வேதனையுற்ற வயோதிப மாது அழுது புலம்பினார்.

இதனைக்கண்ட இளைஞர் கோஷ்டியொன்று திரண்டு நல்லூரில் அமைந்துள்ள இந்து விடுதியின் மதிற்சுவரும், அறி

→08ஆம் பக்கம் பார்க்க

## ரஷ்யாமறுப்பு

(கொழும்பு)

தடைசெய்யப்பட்டஆயுதங்களையோ, இரசாயன ஆயுதங்களையோ ரஷ்யா இலங்கைக்கு விற்பனை செய்யவில்லை என கொழும்பில் உள்ள ரஷ்யத்தூதரகம் அறிவித்துள்ளது.

ரஷ்யாவில் இருந்து இரசாயன ஆயுதங்களை இலங்கை அரசு கொள்வனவு செய்துள்ளதென்று வெளியான செய்திகளையடுத்தேரஷ்யதூதரகம் இலங்கைக்கு தாம் எந்தவிதமான இரசாயன ஆயுதங்களையும் விற்பனை செய்யவில்லையென தெரிவித்துள்ளது.

(ம)

## இராசி பலன்

19/8/2001
(ஆவணி 3 ஞாயிறு)
அமாவாசை மு.ப 9.18 வரை
மகம் பி இ 4 19 வரை
ராகுகாலம் 4.35-6.05
நல்லநேரம் 9.05-10.35

**மேடம்**

குடும்பக் கவலை, உடல் வியாதி, வியாபார மேன்மை, முயற்சி தாமதம்.

**இடபம்**

தன்னம்பிக்கைக் குறைவு, ரோக பயம், கல்வி மேன்மை, காரிய தாமதம்.

**மிதுனம்**

இனிய சம்பவம், கூட்டு முயற்சி, வாக்கு மேன்மை, தனவரவு.

**கடகம்**

மாதர் நட்பு, வாக்குக்கலகம், வீண் செலவு, காரிய தாமதம்.

**சிங்கம்**

பெரியோர் ஆசி, நல்ல முயற்சி, சயன சுகம், போசன சுகம்.

**கன்னி**

உணர்ச்சிவசப்படல், காரிய அலைச்சல், சுபசெலவு, உடல் நலக்குறைவு.

**துலாம்**

காரிய நன்மை, நண்பர்கள் சந்திப்பு, பொருள் சேர்க்கை, நன்மதிப்பு.

**விருச்சிகம்**

தொழில் சிறப்பு, அதிகாரம், முயற்சி கைகூடும், நல்ல செய்தி.

**தனுசு**

ஸ்திரீபீடை, நிலைமாற்றம், வயிற்றுக் கோளாறு, வீண் அச்சம்.

**மகரம்**

எதிர்பாராத பிரச்சினை, பிரயாண அச்சம், உறவினர் வெறுப்பு, காரிய தாமதம்.

**கும்பம்**

களத்திர சுகம், வாகன வசதி, நண்பர்கள் சந்திப்பு, காரிய அனுகூலம்.

**மீனம்**

பகைவர் விலகுவர், நோய் குணமடையும், தொழில் விருத்தி, காரிய அனுகூலம.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது).

-வளவன்-

## மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் பத்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஆறுபேர்கொண்ட பத்து ஓவர் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி நடத்தப்படவுள்ளது.

இச்சுற்றுப் போட்டியில் யாழ். மாவட்டத்தில் உள்ள சகல விளையாட்டுக்கழகங்களும் பங்குபற்றலாம் எனவும் இதற்கான விண்ணப்ப முடிவுதினம் இம்மாதம் 28ம் திகதி எனவும் சங்க நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

உ

## கைக்குண்டுடன் இளைஞர் கைது

(கொழும்பு)

மட்டக்களப்பு ஓட்டமாவடியில் ஒருவர் கைக்குண்டுடன் கைதுசெய்யப்பட்டார்.

கடந்த 15 ஆம் திகதி சின்னவன் விக்னேஸ்வரன் (மாவடி வேம்பு சித்தாண்டி) என்பவரே கைது செய்யப்பட்டு வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (க)

# நாட்டின் அரசியல் நிலைமைகளை ஆராய்வதற்கு ஜனாதிபதி அழைப்பு

(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி குறித்து நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை ஆராய்வதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பொதுஜன ஐக்கிய முன்னணியின் முக்கியஸ்தர்களுக்கு அவசர அழைப்பு விடுத்துள்ளார்.

115 பெரும்பான்மை பாராளுமன்ற உறுப்பினர்களுடன் மாற்றுப்பாராளுமன்றக் கூட்டம் ஒன்றை கடந்த 17ம் திகதி வெள்ளிக்கிழமை பாராளுமன்றக்குழு அறையில் நடத்திய நிலையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இக்கூட்டத்தைக் கூட்டவுள்ளார்.

இக்கூட்டத்திற்கு அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், முதலமைச்சர்கள் மாகாணசபை உறுப்பினர்கள், நகரசபை, பிரதேசசபை தலைவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

நாட்டில் என்றுமில்லாதவாறு எதிரணியின் கை ஓங்கியிருப்பதை அடுத்து கூட்டப்படும் இக்கூட்டத்தில் தற்போதைய அரசியல் நெருக்கடி, பொதுஜன ஐக்கியமுன்னணியின் செயற்பாடுகள் தொடர்பாக ஆராயப்படவுள்ளதுடன், ஜே. வி. பியுடனான கூட்டுத்தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது.

இதேவேளை செப்ரெம்பர் 7ல் பாராளுமன்றத்தைக் கூட்டி அதில் ஜனாதிபதியின் உரையை அடுத்து மீண்டும் பாராளுமன்றம் ஒத்திவைப்பது தொடர்பாகவும் நிலைமை மோசமடையின் பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு புதியதொரு பொதுத்தேர்தலை நடத்துவது தொடர்பாகவும் ஜனாதிபதி சந்திரிகா எடுத்து விளக்குவார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (வ

## விளையாட்டுப் போட்டி

(மல்லாகம்)

இணுவில் கிழக்கு கலாஜோதி சனசமூக நிலைய விளையாட்டுப் போட்டி நேற்றும் இன்றும் இடம்பெற்று வருகின்றது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக வலிதெற்குப் பிரதேசசபைத் தலைவர் கே. கமலசேகரன் கலந்துகொள்கிறார்

(உ-122)

## திருட்டு அதிகரிப்பு

(இணுவில்)

சுன்னாகம் தெற்குப் பகுதியில் இரவுநேர மின்வெட்டைப் பயன்படுத்தி திருட்டுச் சம்பவங்கள் பல இடம்பெற்று வருவதாக கூறப்படுகிறது.

(உ-49

## தளபாடக் கொள்வனவுக்கு நிதி

(மல்லாகம்)

இணுவில் அண்ணா சனசமூக நிலைய முன்பள்ளியில் நிலவி வந்த பாடப் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்யும் வகையில் வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு 30 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளது.

(உ-122)

### புதிய பிரதேச செயலக செயற்பாட்டுக்கு

# ஊறுவிளைவிக்கும் பஸ் டிப்போவை நகருக்கு வெளியே மாற்றவேண்டும்!

### உறுதி கையளிக்கும் வைபவத்தில் பரு. மாவட்ட வைத்திய அதிகாரி

(புலோலி)

பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்குச் சொந்தக் கட்டிடமில்லாதது பெருங் குறைபாடாகும். இக் குறைபாட்டைப் போக்க பொது மக்களின் ஒத்துழைப்புடன் காணி கொள்வனவு செய்து காணியைக்கையளிப்பு வைபவத்தை நடாத்துவதுமகிழ்ச்சிக்குரியதாகும்.

இவ்வாறு பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கு பொது மக்களின் அன்பளிப்பினால் கொள்வனவு செய்யப்பட்ட காணி கையளிப்பு விழாவிலே உரையாற்றிய யாழ் அரச அதிபர் கே சண்முகநாதன் குறிப்பிட்டார்.

விழாவிற்கு இளைப்பாறிய பிரதேச செயலர் எஸ். முருகேசபிள்ளை (ஜே. பி) தலைமை தாங்கினார். சுவாமி சித்ருபானந்தா, வணபிதா இருதயதாஸ் அடிகளார் ஆகியோர் ஆசியுரை நிகழ்த்தினார்கள். கிராம அலுவலர் எஸ். சிவராஜன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

பொதுமக்கள் சார்பில் எஸ். முருகேசம்பிள்ளை, பிரதேச செயலர் ஏ. சிவசுவாமி ஆகியோர் ஸ்ரீலங்கா அரசின் சார்பில் யாழ் அரசஅதிபர் சண்முகநாதனிடம் காணி உறுதியைக் கையளித்தனர்.

வல்வெட்டித்துறைமாவட்ட வைத்தியசாலை அதிகாரி வைத்திய கலாநிதி கே. மயிலேறும்பெருமாள் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது.

இப்பிரதேச செயலகத்திற்கான காணி கையளிக்கப்படுவது மிக முக்கியமான நிகழ்வாகும். அமையவுள்ள பிரதேச செயலகத்திற்கு அருகில் போக்குவரத்துச் சபை டிப்போ இருப்பதுதான் பிரச்சினைக்குரியது. டிப்போவில் வெளிவரும் கழிவுகள் மனித சுகாதாரத்திற்கு பெரும் கேடுகளை விளைவிக்கும். அருகில் டிப்போ வேலைத்தளம் இருப்பது சத்தங்களை ஏற்படுத்தி அமைதிக்கு பங்கத்தை ஏற்படுத்தும். போக்குவரத்து நெருக்கடிகளினால் பயங்கர விபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன எதிர்காலத்திலும் ஏற்படும் இவற்றினைக் கருத்திற்கொண்டுபஸ்டிப்போவை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். பஸ்டிப்போ சனநடமாட்டம் குறைந்த பகுதியில் நகருக்கு வெளியேதான் இருக்கவேண்டும். டிப்போவிலிருந்து புறப்படும் பஸ் வண்டிகள் நகரத்தில் இருக்கும் பஸ்நிலையத்திற்கு வந்து செல்வதே பொருத்தமானதாகும்.

பருத்தித்துறை பிரதேச சபைத்தலைவர் திரு. ஐ ஸ்ரீரங்கேஸ்வரன் பருத்தித்துறை நகரசபை உபதலைவர் எஸ். மணிவண்ணன் வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் வி.பி.வேலாயுதபிள்ளை உட்பட இன்னும் பலர் இவ்விழாவிலே கலந்துகொண்டனர்.

(வ-52)

## தமிழர் வாழ்வில் விழிப்புணர்வை ஏற்படுத்தியவர் குமார்

(யாழ்ப்பாணம்)

தமிழர் வரலாற்றிலே ஒரு புதிய எழுச்சிஏற்படுத்தி உலகெங்கும் தமிழ் இனம்உண்டு எனப் பறைசாற்றிய 'மாமனிதர்' என்றால் அது திருகுமார் பொன்னம்பலம்எனின் அது மிகையாது. அவ்வாறு வாழ்ந்து மறைந்தும் மறையாது தமிழர் தம் மத்தியில் வாழ்பவர் குமார் பொன்னம்பலம் என அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் மகேந்திரராசா தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி தலைமையில் கொக்குவிலில்மறைந்தகுமார் பொன்னம்பலத்தின் பிறந்த தினக் கூட்டத்தில் பங்குபற்றி உரையாற்றும் போது இதனைத் தெரிவித்துள்ளார். மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில் அழுத மக்களின் கரம்பிடித்து அவர்கள் துயர் துடைக்க அரும்பாடுபட்டவர் அது மட்டுமன்றி தமிழ்இளைஞர்கள், யுவதிகள்கைதுசெய்யப்பட்டு காணாமற் போவதைக் கண்டறிந்துஅவர்களின் விடுதலை தொடர்பாக அயராது உழைத்தவர்.

தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்துநில்லடா என்ற கோட்பாட்டை தமிழர்தம் வாய்களில் உச்சரிக்க உரைத்து இன்றும் மறைந்தும் மறையாதுவாழும் எங்கள் குலவிளக்கு அணைந்தது தமிழர் எமக்கு சுய உரிமைவேண்டும் என முதல் குரல்கொடுத்தவர் மாமனிதர் குமார் பொன்னம்பலம் ஆவர்.

காங்கிரஸ் கட்சிஉறுப்பினர்களும், பாராளுமன்ற உறுப்பினர் விநாயக மூர்த்தியும் இந் நிகழ்வில் உரையாற்றினார்கள். (வ-10)

## சாவகச்சேரிக்கான பஸ் சேவை விஸ்தரிப்பு

(மந்திகை)

சாவகச்சேரிக்கான இலங்கைபோக்குவரத்து சபையின் பேருந்துச்சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளதாக போக்கு வரத்துச்சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

பருத்தித்துறையில் இருந்து 765ஆம் இலக்க பாதை ஊடான அந்தணத்திடல் நுணாவில் வரை இடம் பெற்றசேவை 14ம்திகதிமுதல் சாவகச்சேரிவரைநீடிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை மானிப்பாய் கைதடி, நுணாவில் ஊடான 811ஆம் இலக்க பேருந்து சேவை சாவகச்சேரி வரையும் நீடிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை டிப்போவிலிருந்து காலை 8.30, பிற்பகல் 2.20மணிக்கு ஆரம்பமாகும் பேருந்து சேவையும் சாவகச்சேரி நகர் சென்று உடன் திரும்பும் எனவும்தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-23)

## 2 வருட கடூழியச் சிறை

(யாழ்ப்பாணம்)

சட்ட விரோத கசிப்பு உற்பத்தியாளர்ஒருவருக்கு யாழ். நீதிமன்றினால் இரண்டுவருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டார் என சந்தேகிக்கப்பட்ட ஒருவர் அண்மையில் யாழ். நீதிமன்றில் நீதிவான் இ.த. விக்னராஜா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

இந் நபர் தொடர்பாக மன்றில் ஏற்கனவே இரு வழக்குகள் பதிவாகி இருந்தமையைத் தொடர்ந்து 50 ஆயிரம் ரூபா தண்டப்பணமாகச் செலுத்துமாறும் தவறின் இரண்டு வருட கடூழியச் சிறைத்தண்டனையை அனுபவிக்குமாறும் நீதிவான் விதித்தார் (உ-6)

## அமைச்சரின் ஏற்பாட்டில் சிவாச்சாரியார் சந்திப்பு

(கொழும்பு)

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஏற்பாட்டில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள கேட்போர்கூடத்தில் பிரம்மஸ்ரீ பா. சண்முகரட்ணசர்மா தலைமையில் நடைபெற்ற விழாவில் பல சிவாச்சாரியார்களும் இந்துக் கலாசார அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இக் கலந்துரையாடலில் இந்துசமயவளர்ச்சியும் பேணுகையும், வேதாகம பாடசாலை அமைப்பு, இந்து மதக் குருமார்களுக்கான பயிற்சி, கோயில்களில் சமய பிரசங்கம் புராணபடலம், அறநெறிப் பாடசாலைகளுக்குகுருமாரின் பங்களிப்பு, இந்து குருமார் எதிர்நோக்கும் பிரச்சினை இந்து மதத்தை நிறுவனமயப்படுத்துவது பற்றிய ஆய்வு போன்ற விடயங்கள் சம்பந்தமாக ஆராயப்பட்டது. (உ)

### வலிதெற்கில்

## வீடமைப்பு திட்டம் பூர்த்தியாகும் நிலையில்

(மல்லாகம்)

வலிதெற்கு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதிகளில் ஜி.ரி.சற் நிறுவன உதவியுடன் வீடமைப்புத் திட்டம் அமுல் படுத்தப்பட்டு வருகிறது.

75 வீடுகள் அமைக்கும் இத்திட்டத்திற்கான 2ஆம்கட்டக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுவிட்டதாகவும், திட்டம் பூர்த்தியடையும் நிலையில் உள்ளதாகவும் சம்பந்தப்பட்ட பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் தெரிவித்தார்.

புன்னாலைக்கட்டுவன்-11, கந்தரோடை-10, உடுவில் மத்தி-13, தாவடி தெற்கு-15 ஏழாலை தெற்கு-14 உடுவில் தென்கிழக்கு-12 என்ற தொகையில் வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

(உ-122)

## நித்தியானந்தா நினைவு நிகழ்வு

[யாழ்ப்பாணம்]

பனை அபிவிருத்திச் சபையின் ஸ்தாபகர் தலைவர் அமரர் கே. சி. நித்தியானந்தா நினைவு தினத்தையொட்டிய நிகழ்வுகள் எதிர்வரும்21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப 2 00மணிக்கு யாழ்ப்பாணம் கே. கே. எஸ். வீதியில் உள்ள யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூள மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

[உ]

## யாழ்.வாசி உட்பட மூவர் வவு. பொலிசில்

(வவுனியா)

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியைச் சேர்ந்த ஒருவர் உட்பட மூவர்வவுனியாபொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப் பட்டுள்ளனர். தருமலிங்கம் நடேசு[வயது46 ஆனைப்பந்தி ஆறுமுகம் அசோகன் [வயது 22] காளிக்குட்டி சிவசேகரன் [வயது 28] ஆகியோரே தடுத்துவைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

[வ]

கடலில் எதிர்கொள்ளும் இன்னல்களைத் தவிர்க்கும் வகையில்

# வேறு தொழில்களில் ஈடுபட உதவுமாறு உலக வங்கிக்குழுவிடம் மீனவர் கோரிக்கை

(மந்திகை)

அடுத்த ஆண்டில் இருந்து கடற்றொழிலை விடுத்து தாம் வேறு தொழில்களில் ஈடுபடுவதற்கு உதவுமாறு கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடமராட்சிப் பகுதிக்கு இரண்டாவது தடவையாக உலக வங்கிக் குழுவினர் அண்மையில் விஜயம் செய்த போது மேற்படி கோரிக்கையை விடுத்தனர்.

கடல்வலய தடைச்சட்டம், கடலில் மீன்பிடிக்கச் செல்லும் போது எதிர் கொள்ளும் அச்சுறுத்தல்கள், கடலில் ஏற்படும் உயிரிழப்புகளினால் மீனவக் குடும்பங்கள் பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்படுதல் ஆகியன குறித்துச் சுட்டிக்காட்டிய கடற்றொழிலாளர்களின் பிரதிநிதிகள்,

இவ்வாறான தேவையற்ற இழப்புகளைத் தவிர்த்து அச்சமின்றிச் சென்று கடலில் மீன் பிடிக்கும் நிலை ஏற்படும் வரை கடற்றொழிலாளர்கள் வேறு தொழில்களில் ஈடுபட உதவ வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர்.

(உ-23)

## தெல்லிப்பழை துர்க்காதேவி வருடாந்த மஹோற்சவம்

(ஏழாலை)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் திருவிழா நடைபெற்று எதிர்வரும் 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வேட்டைத்திருவிழாவும், 29ஆம் திகதிபுதன்கிழமை சப்பறத் திருவிழாவும்,30 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும்,31 ஆம் திகதிவெள்ளிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன

(செ106.)

## காணாமற்போன பல்கலை மாணவன் பொலிஸாரால் விடுதலை

[அரியாலை]

கடந்த செவ்வாய்க்கிழமை முதல்காணாமற் போயுள்ளதாக பேராதனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீடமாணவன் மோ.சேந்தன் சத்திய தீபன்கடந்தவியாழக்கிழமை நண்பகல் கண்டிப் பொலிஸாரால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

வங்கிக்கு செல்வதாகக் கூறிச் சென்ற மேற்படிமாணவனை இரு தினங்கள் கண்டிப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்திருந்ததாக தெரிய வந்துள்ளது.

[உ-106]

## வணிக குறு வினாவிடை போட்டி முடிவுகள்

(மந்திகை)

தென்மராட்சி கல்வி வலகப் பாடசாலைகளில் வணியக் கல்வி கற்கும் தரம் 10,11 மாணவர்களிடையே நடைபெற்ற வணிகக் குறுவினா விடைப் போட்டியில் 22 மாணவர்கள் அதி உயர் புள்ளிகளைப்பெற்றுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்துள்ளார்.

தரம் 10 இல் பங்குபற்றிய நுணாவில் அமிர்தாம்பிகை வித்தியாலயத்தைச் சேர்ந்த அ. ஸ்ரீரூபி, தே. வித்தகன், சி.நிரோஜினி ஆகியோர் முறையே முதல்மூன்று இடத்தினையும்ஏனைய பாடசாலைகளை சேர்ந்த 7 பேர் பாராட்டு சான்றிதழ்களையும் பெற்றுள்ளனர்.

தரம் 11 இல் பங்குபற்றிய சாவகச்சேரி இந்துக் கல்லூரியைச் சேர்ந்த து. ஐங்கரன், பா. சந்தியசுதன்,க.வாகீசன் ஆகியோர் முறையே முதல் மூன்று இடத்தினைப் பெற்றுள்ளனர். ஏனைய பாடசாலைகளைச் சேர்ந்த எட்டுப் பேர் பாராட்டு சான்றிதழ்களை பெற்றுள்ளனர்.

(உ-23)

## பக்திபூர்வமாக இடம்பெற்ற தீர்த்தோற்சவம்

(அரியாலை)

நேற்று இடம் பெற்ற பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி கோவில் தீர்த்தோற்சவத்தில் பெரும் திரளான அடியார்கள் கலந்து கொண்டு பக்திபூர்வமாக திருக்கேணியில் தீர்த்தமாடினர்.

(உ-106

## பிரவேச பண்டித, பால பண்டித,பண்டித பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சைவபரிபாலன சபையினால் கடந்த மே மாதம் நடத்தப்பட்ட சைவ சித்தாந்த பிரவேச பண்டித, பால பண்டித, பண்டித தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

மேற்படி தேர்வில் சித்தி பெற்றோர்.விபரம் வருமாறு,

### பிரவேச பண்டிதர்

**பிரிவு:-2**

செ. [illegible] டத்தரிப்பு, ப. பிரிந்தா-சண்டிலிப்பாய், வை. ஸ்ரீலதா-புங்குடுதீவு, த. நகுலன்-தையிட்டி.

**பிரிவு: 3**

சு. சிவதாஸ்-குருமன்காடு, த. சுதன்-சண்டிலிப்பாய்

### பால பண்டிதர்

**பிரிவு:2**

திருமதி து. தயாநிதி-நீர்வேலி, சு. மனோரஞ்சனி-அராலி.

**பிரிவு: 3**

உ. காஞ்சனா - மாவிட்டபுரம், சு. புஸ்பரேகா - நீர்வேலி.

**நூனசித்தி**

ப. [illegible]-கரந்தன்

### சித்தாந்த பண்டிதர்

**பிரிவு:2**

அ இராஜரட்ணம் - நல்லூர், வை. பாலகிருஷ்ணன்-திருகோணமலை, கு.மாலினி கந்தர்மடம், ஐ. சித்திரா-அளவெட்டி, ந. விஜிதா-மாவிட்டபுரம், செ. ரேவதி-நீர்வேலி, கு. கிருபாகினி-அச்சுவேலி, வி. பராசக்தி-நீர்வேலி, செ. இந்திரா-நீர்வேலி, வ வரதராஜா-கொக்குவில்,வெ. சக்திவேல்-வட்டுக்கோட்டை.

**பிரிவு 3**

கு. அரசேஸ்வரன்-நல்லூர் தி. ரூபி-சண்டிலிப்பாய், ம. ஜமுனா-கொக்குவில்.

**நூனசித்தி**

கு.சிவராஜசர்மா-திருநெல்வேலி.

(உ)


**ST. JOHN'S COLLEGE JAFFNA.**

**CHUNDIKULI GIRLS' COLLEGE, JAFFNA.**

**ADMISSION 2002**

1. பின்வரும் வகுப்புக்களில் வெற்றிடங்கள் உள்ளன. தரம் 1, தரம் 6.
2. அ) விண்ணப்பப்படிவங்களை அந்தந்தக் கல்லூரிகளிலிருந்து 01-09-2001 முதல் 15-09-2001 வரை பெற்றுக்கொள்ளலாம்.
   ஆ) எக்காரணம் கொண்டும் 15-09-2001 க்குப் பின் விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப் படமாட்டாது.
   இ) எமது விண்ணப்பப் படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
   ஈ) விண்ணப்பப் படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 21-09-2001. அத்திகதிக்குப் பின் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டாது.
3. பிழையாக நிரப்பப்பட்டவையும், பூரணமாக நிரப்பப்படாதவையுமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம்.
4. தரம் ஒன்றுக்கான விண்ணப்பப்படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தின் பிரதி (போட்டோஸ்ரற் கொப்பி) இணைக்கப்பட வேண்டும்.
5. விண்ணப்பப் படிவங்களை ஞாயிறும், விடுமுறையும் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை அந்தந்தக் கல்லூரிகளில் பெற்றுக்கொள்ளலாம்.
6. ஒரு படிவத்திற்கான கட்டணம் ரூபா 30/-
7. வயதெல்லைகள்:
   அ) தரம் 1: விண்ணப்பதாரி 01-02-1996 க்கும் 31-01-1997 க்கும் இடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
   ஆ) தரம் 6: விண்ணப்பதாரி 01-02-1991 இல் அல்லது அதற்குப் பின் பிறந்திருத்தல் வேண்டும்.
8. பிரவேசப் பரீட்சை:
   தரம் 6 வகுப்புக்கு 29-09-2001 காலை 9.00 மணிக்கு பரீட்சை ஆரம்பமாகும்.
9. ஏனைய வகுப்புக்களுக்கான விண்ணப்பங்களையும் காரியாலயத்தில் இதேநாட்களில் பெற்றுக்கொள்ளலாம். பரீட்சை மார்கழியில் நடத்தப்படும். விபரங்கள் பத்திரிகை வாயிலாக அறிவிக்கப்படும்.

அதிபர்கள்.

[C/2402]


## விசு...

**2001 ஐப்பசி- 2002 சித்திரை வரை:**

வழக்குத் தகராறு நீங்குதல், குடும்ப சுகம் குறைவு, கடன் சிக்கல் தோன்றுதல், தேகசுகவிருத்தி, கல்வி தேர்வு லாபம், வியாபாரச் சிறப்பு, அலைச்சல், விவசாய விருத்தி, வாகனம் லாபமாதல்வசீகரம், புதிய ஸ்தானம், தொழில் முயற்சி நன்மை, அரச நன்மை, உணவு நன்மை குறைதல் சிலபோது அமையவுள்ளன.

**உத்தியோகத்தர்களுக்கு:**

முதல சிலமாதங்களமத்திம சுகலாபம். ஜூனிலிருந்து பதவி உயர்வு, பணவிருத்தி கிடைக்கும். வியாபாரிகளுக்கு அதிக பிரயாசமும் மத்திம நன்மையும் அமையும்,ஜூனில் இருந்துநல்ல வருமான லாபம் வரவுளளது.

**மாணவர்களுக்கு:**

முதலில் கல்வி ஊக்கம் தேர்வு நன்மை குறையும், ஜூனிலிருந்து படிப்பில் நல்ல முன்னேற்றச் சிறப்பு தோன்றும்.

**இளைஞர் யுவதிகளுக்கு:**

தற்கால விவாக நன்மை சிலருக்குத் தோன்றும், ஜூனில் இருந்து விவாகத் தடை நிலவும். ஆயினும் தொழில் உத்தியோக நன்மை கிடைக்கும்.

**தொழிலாளர்களுக்கு:**

ஆரம்பத்தில் அதிக பிரயாசமும், வருமானப் பிரச்சினையும் உள்ளது. ஜூனிலிருந்து தொழில் வருமான லாபம் விருத்தியாகும்.

**முதியோருக்கு;**

ஆரம்பத்தில் மத்திம சுகம் உள்ளது. ஜூனில் இருந்து தேக சுக விருத்தியுடன் சுக லாபம் விளங்கும்.

(தொடரும்)

## அரசின் அசமந்தப் போக்கை விசாரிக்க தெரிவுக்குழு அமைக்க கோரும் பிரேரணை

### ஐ.தே.க எம்பிக்கள் சமர்ப்பிப்பர்

(கொழும்பு)

ஐ. தே. க. எம். பி.க்களான ரிரோன் பெர்னாண்டோ, ஜோன் அமரதுங்க, மஹிந்த சமரசிங்க, தாகம்விமலசேன, எம். எஸ். செல்லச்சாமி, எம். எச். முகமது, ஆகியோர்கட்டுநாயக்கா விமானப்படைத்தளம், விமான நிலையம் என்பனவற்றை பாதுகாப்பதற்கு அரசு தவறியதை விசாரிப்பதற்கு பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை அமைக்கும்படி கோரும் பிரேரணை ஒன்றை கொண்டு வருவதற்கு திட்டமிட்டுள்ளனர். அதாவது,

ஒரு நாடு சர்வதேச சமூகத்தின் ஒரு அம்சமாகவும், உலகமயமாக்கப்பட்ட பொருளாதாரத்தைக் கொண்டும்இயங்குவதற்கு ஒரு சர்வதேச விமான நிலையம் தேவை.

இலங்கையின் ஒரேயொரு சர்வதேச விமான நிலையத்தை அரசாங்கம் பாதுகாப்பதற்கு தவறியது,

விமானப்படை நிலையத்தின் தாக்குதல் வலு 25 சதவீதம் பாதிக்கப்பட்டுபோகுமளவுக்கு அதன் பாதுகாப்பு ஏற்பாடுகள் அரசாங்கத்தினால் பேணப்படவில்லை,

கட்டுநாயக்க விமானப் படைத் தளம் தொடர்பான பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகள், குறிப்பாக நீர்கொழும்பு புலனாய்வு அதிகாரி நிஷாந்தவின் அறிக்கை புறக்கணிக்கப் பட்டது,

விடுதலைப் புலிகளின் இணைய தளச் செய்திகளை, குறிப்பாக ஜூலை இரண்டாம் திகதி மோசமான பின் விளைவுகளை சந்திக்க வேண்டிவரும் என்று விடுக்கப்பட்ட எச்சரிக்கைகளை அரசாங்கம் புறக்கணித்தது,

ஆகியவற்றை விசாரிப்பதற்கு தெரிவுக்குழுவொன்று அமைக்கப்பட வேண்டும் என ஏழு எம்.பிக்களும் பிரேரணை கொண்டுவரவுள்ளனர்.

(உ)

## பயிர்ச்செய்கை

(கல்வயல்)

சரசாலை,மட்டுவில் பகுதிகளில் மீளக்குடியமரும் மக்கள் பயிர்ச்செய்கையில் நாட்டம் காட்டி வருகின்றனர்.

[உ-111]

## பாடசாலை மாணவன் குண்டு வீச்சில் பலி; கண்டித்து பல்கலை மாணவர் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவர்களை இலக்குவைத்து இடம்பெறும் கொடிய போர் முறைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். அன்றேல், மாணவர்களின் அரசிற்கெதிரான கடும் போராட்டங்களை அரசு சந்திக்க வேண்டி வரும்.

கடந்த 13 ஆம்திகதி விஸ்வமடுப் பகுதியில் இடம்பெற்ற கிபிர் விமானத் தாக்குதலில் பரமகுலசிங்கம் ஜெசன் என்ற மாணவன் கொல்லப்பட்டமையைக் கண்டித்து யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும், இலங்கை விமானப் படையினர் பல ஆண்டுகளாக மக்கள் குடியிருப்புகள், அப்பாவி பொது மக்கள், பாடசாலைகள், தேவாலயங்கள் என்பவற்றின் மீது கண்மூடித் தனமாக குண்டு வீச்சுகளை நடத்தி வருகின்றனர்.

இந்த வரிசையிலேயே மேற்படி மாணவனும் கொல்லப்பட்டுள்ளார். இந்தச் சம்பவமானது பாடசாலை மாணவர்களையும், பல்கலைக் கழக மாணவர்களையும் இன்னல்களுக்கு ஆளாக்கும் அரசின் நடவடிக்கைகளில் ஒன்றாகும்.

இத்தகைய அரசின் ஈவிரக்கமற்ற தாக்குதல்களை சகல சமூகத்தினரும் வன்மையாக கண்டிக்க வேண்டும் என கேட்டுக் கொள்கின்றோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## எதிர்க்கட்சிகள் ஆட்சியமைக்கும் தகுதியைக்கொண்டுள்ளன

(கொழும்பு)

எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியமைக்கும் தகுதியை கொண்டுள்ளனர் என்பதை உலகுக்கு எடுத்துக் காட்டுவதற்காகவே பாராளுமன்றம் கூடியது என்று தமிழர் விடுதலைக் கூட்டணி சிரேஷ்ட உபதலைவர் வி.ஆனந்த சங்கரி கடந்த வெள்ளியன்று பாராளுமன்றம் கூடியமை தொடர்பாக கருத்து தெரிவிக்கையில் குறிப்பிட்டார்.

பி.பி.சி செய்தி ஊடகத்திற்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அத்துடன், எதிர்வரும் 7 ஆம் திகதி கூடவிருக்கும் பாராளுமன்ற கூட்டதொடரில் அரசுக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை 17 ஆவது அரசியலமைப்பு திருத்துதல் தொடர்பான பிரேரணை, ஐந்து ஆணைக் குழுக்கள் அமைப்பதற்கான பிரேரணை மற்றும் பாராளுமன்றத்துக்குள்ள அதிகாரங்களை மீள்பரிசீலனை செய்தல், ஜனாதிபதிக்குள்ள அதிகாரம் என்ன, பாராளுமன்றத்துக்குள்ள அதிகாரம் என்ன போன்ற விடயங்கள் விவாதத்திற்குட்படவிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (உ-4)

## கட்டுத்துவக்கு வெடித்து படுகாயம்

[விஸ்வமடு]

கட்டுத்துவக்கு வெடித்ததனால் படுகாயமடைந்தநிலையில் ஒருவர் மல்லாவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விஸ்வமடுவைச் சேர்ந்த சின்னையா கறுப்பையா (வயது 48) என்பவரே இவ்வாறு சத்திர சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [உ-5]

## இரும்புக்கடை

(புலோலி)

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நாவலடியில் புதிய இரும்பு விற்பனை நிலையம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை சங்க இயக்குநர் சபை மேற்கொண்டு வருகின்றது. (உ-52)

## விபத்தில் படை வீரர் காயம்

[மந்திகை]

மோட்டார் சைக்கிள் ரோந்துப் பணியில் ஈடுபட்ட வேளை, விபத்துக்குள்ளானதில் காயமடைந்த படை வீரர் ஒருவர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

செவ்வாயன்று மாலை இடம்பெற்ற இந்த விபத்துச் சம்பவத்தில் ஜி. எஸ். பண்டார [வயது-39] என்பவரே காயமடைந்தவராவார். [உ]

## சேதமான விமானம் மீண்டும் சேவையில்

(கொழும்பு)

கடந்த மாதம்கட்டுநாயக்கா விமானத்தளம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் சேதமடைந்த எயர்பஸ்- ஏ 340என்னும் பயணிகள் விமானம் தறபோது திருத்தப்பட்டு செப்ரெம்பர் முதலாம் திகதியிலிருந்து சேவையில்ஈடுபடவிரும்பதாக ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது,

இதன் மூலம் தடைப்பட்டிருந்த புதுடில்லி அபுதாபி ஸ்ரடிஸ்நாடுகளுக்கானசேவைகள் ஆரம்பிக்கப்படுமெனவும் அத்துடன் சிங்கப்பூர்,கோலாலம்பூர், சூரிச் ஆகிய நகரங்களுக்கான சேவைகளை மேலும் விஸ்தரிக்கவுள்ளதாகவும் அந்நிறுவனம் அறிவித்துள்ளது. (உ-4)

## 'உ' அட்டைக்காரருக்கு பளை பி. செயலர் பிரிவில் நிவாரண அனுமதிப் பத்திரம்

(யாழ்ப்பாணம்)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிலிருந்து 2000 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இடம் பெயர்ந்து, தற்காலிகமாக ஏனைய இடங்களில் வசித்து வரும் குறைந்த வருமானம் பெறும்'உ' நிவாரண அட்டை வைத்திருப்பவர்களுக்கு பளைப்பிரதேச செயலகத்தால் நிவாரண உணவுப் பத்திரம் வழங்கப்பட்டு வருகின்றது.

இவ்வுணவுப் பத்திரத்தை இதுவரை பெற்றுக்கொள்ளாதவர்கள், எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணிக்கு யாழ்ப்பாணத்தில் இயங்கும் பளைப் பிரதேச செயலக உப அலுவலகத்திலும், 22 ஆம் திகதி புதன் கிழமை மு.ப. 10.00மணிக்குபருத்தித்துறையில் இயங்கும் பளை பிரதேச செயலகத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்படி பிரிவில் புதிய 'உ' பங்கீட்டு அட்டை விநியோகிக்கப்பட விருப்பதால் குடும்பத் தலைவர்கள் தமது பழைய 'உ'பங்கீட்டு அட்டைகளையும், தமது குடும்பத்திலுள்ள ஏனைய அங்கத்தவர்களது தேசிய அடையாள அட்டைகள், விசேட அடையாள அட்டைகள் என்பவற்றையும் எடுத்து வருமாறும் பளைப்பிரதேச செயலர் கேட்டுள்ளார். (செ)

## நல்லைக் கந்தன் சந்நிதியில் இன்று

[யாழ்ப்பாணம்]

இளங்கலைஞர் மன்றத்தினரால் தினமும் மாலை 6.00 மணி தொடக்கம் 7:15 மணி வரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடத்தப்படும் தெய்வீக இசையரங்கில் இன்று வீ. சிவஞானசேகரத்தின் பாட்டுக் கச்சேரி இடம் பெறவுள்ளது.

★ ★ ★

நல்லூர் மேற்கு வீதி முத்து விநாயகர்ஆலயத்தில் தினமும் மாலை 5.15 மணிக்கு இடம் பெற்றுவரும் கம்பராமாயண சொற்பொழிவில் இன்று இறுதி நிகழ்வாக ''ஸ்ரீ ராம பட்டாபிஷேகம்'' என்ற தலைப்பில் சிவ. வை. நித்தியானந்தசர்மா சொற்பொழி வாற்றுவார்.

★ ★ ★

நல்லூர் ஆலய முன்றலில் அமைந்துள்ள ஸ்ரீமனோன்மணி அம்மன் ஆலயத்தில் தினமும் மாலை இடம்பெற்று வரும் 'புராண இதிகாச முத்துக்கள்' என்னும் பேச்சுத் தொடரில் 'அருள்வாய் குகனே' என்ற தலைப்பில் காரை கு. சிவராஜசர்மா சொற்பொழிவாற்றுவார்.

★ ★ ★

வடபிராந்திய இந்துப் பேரவையினரால்நல்லூர்அறுபத்து மூன்று நாயன்மார் குருபூஜை மடத்தில் தினமும் பி.ப. 2.00 மணிக்கு நடத்தப்பட்டு வரும் சமய சொற்பொழிவில் இன்று இறுதி நிகழ்வாக 'ஸ்ரீவள்ளி திருமணம்' என்ற தலைப்பில் சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன் குழுவினரின் வில்லிசைக் கச்சேரி இடம் பெறவுள்ளது. இன்றைய தினம் சைவப்பெரியார்கள் கலைஞர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (செ)

## நல்லூரான் திருவடிக்கு



### தெய்வீகமும் சீரிய கீர்த்தியும்

சொல்லோவிய பாடல் எலாம் உனை
வல்லோய் என வாய்மொழி பேசிட
கூர் கூரென வேல் வர காவிய
எழில் மேவ
நல்லார் உனை என்றென்றும் பாடிட
நல்லூரினில் தொல்லைகள் ஏகிட
பூமாலைகள், பூணணி, வேடங்கள்
இவை சூழ
உள்ளாவியும் வெள்ளி வேலாயுத
தெய்வீகமும் சீரிய கீர்த்தியும்
கண் போல் உயிர் அள்ளிய கீதமும்
நினைந்தாட
எல்லார் மகிழ் கந்த பிரான் என
ஆகா இது பேரொளி தானென
பாடாதிரு பேயிருள் வீழ்வுற
வருவோனே.

பவித்திரன்

### மயிலேறி வாராயோ

இராகம்:- பந்துவராளி தாளம்:-ஆதி

எடுப்பு

காசினியைக் காக்க வந்தவனே முருகா-ஈழத்
தமிழனின் துயர் தீர்த்தருள மாட்டாயோ
(காசினியை ... ...)

தொடுப்பு

பூசிப்போமையா நாளும் உனைப் போற்றி-உந்தன்
பூவடிப் பாதத்தில் திருத்தீபங்கள் ஏற்றி
(காசினியை ... ...)

முடிப்பு

ஈழமே கலங்குகையில் மயிலேறி வாராயோ-முருகா
சூழநிற்கும் பகைவிரட்ட வேலை எடுத்தாட்டாயோ
ஓயாத அலையாக நின்னருள் சுரக்காயோ-குமரா
புதுவாழ்வு பூத்திட புன்னகை பூக்காயோ

எம். சுயர்சன்

### கும்மியடி வாலைப் பெண்ணே!

அல்லற் பிறவியின் ஆணிவேரை வெட்டி
ஆனந்த வீட்டின்ப வாழ்வளிக்கும்
நல்லைகந் தன்தன்னை நாளும் துதிசெய்து
நாடிக்கும்மியடி வாலைப் பெண்ணே!

வல்லூழ் வினைதன்னை வச்சிர வேல்கொண்டு
வந்து அரைநொடி நேரத்திலே
வல்லமை யாய்ப்போக்கும் வள்ளி மணாளனை
வாழ்த்திக் கும்மியடி வாலைப் பெண்ணே!

வாய்மை செறிதுங்க வானவர்க் காகவே
வல்லரக் கர்களை மாய்த் தொழித்த
தூய்மை செறிநல்லைச் சுந்தரக் கந்தனைக்
சூழ்ந்து கும்மியடி வாலைப் பெண்ணே

'சமூக இரத்தினம்' எம்.கே. இளையப்பு

### நாளும் நல்லூர் அணைவார்

வள்ளி கணவா தெய்வமின்
மணாளா எனவே வானோர்கள்
உள்கி உருகும் உமையாள்
கணவர் உவக்க உருள்தாரான்
தெள்ளத் தெளிந்த விதியால்
அமரர் மனிதர் தொழுதேத்த
உள்ளம் ஒளிர உலகர்
நாளும் நல்லூர் அணைவாரே.

சிவ. சண்முகவடிவேல்

### கவன்றோம் கடம்பா

அடிபட்டு இடிபட்டு உதைபட்டு
குடிபட்டு குறைபட்டு குதைபட்டு
மிடிபட்டு தடிபட்டு உடைபட்டு
கடிபட்டு களைத்தோம் கந்தா-காப்பாய்
அடைபட்டு இரைபட்டு குலைபட்டு
தடைபட்டு தகண்பட்டு திரம்பட்டு
நடைபட்டு பிடிபட்டு துகள்பட்டு
கடைப்பட்டு கவன்றோம் கடம்பா-காகும்

கீழ்க்கரவை செல்லையா வல்லிபுரம்

### நல்லை வேலன் பாதம் பணிந்திடு

'தொல்லை கொடுக்கும் கொடும்பிணிகளகற்றிடுவோன்
எல்லையில்லா இன்பப்பெருவாழ்வு தந்திடுவோன்
நல்லை வேலன் திருப்பாதம் பணிந்திடு-இனி
இல்லை யுனக்கொரு போதும் தொல்லை'

கே. அரசேஸ்வரன்

## இன்று ஒரு தகவல்

# தமிழர் வீரமும் காதலும்

பழம்பெரும் கிரேக்கஇலக்கியமான இலியட், குதிரை போன்ற உருவம்செய்துஅதன் வயிற்றில்வீரர்களைமறைத்து வைத்து விட்டுப் புறமுதுகிட்டோடுவதையும், கோட்டைக்குள் இழுத்துச் செல்லப்பட்ட குதிரையிலிருந்து பாதி இரவில் வீரர்கள் புறப்பட்டு படுத்து உறங்குபவர்களைபடுகொலை புரிவதையும் வீரம் என்று ஏற்றுக் கொள்கிறது. ஆனால் பழந்தமிழ் அரசர்களோ ஞாலம் கிடைப்பதாக இருந்தாலும் கூட இவ்வாறு மானம் அழுங்கும் செயல் செய்ய மாட்டார்கள்: 'எம் அம்பு கடிது விடு முன் நும் அரண்சேர்க' என்று மாற்றரசர்களுக்குத் தூதுவர் மூலம் ஓலை அனுப்பியபின்னர் தான் அவர்களது போர் முரசமே முழங்கும். நேருக்கு நேர், வாளுக்குவாள், வீச்சுக்குவீச்சு என்று தான்அவர்களது போர் முறையிருக்குமே, தவிர மறைந்திருந்து தாக்குவதோ, மாற்றார் அயர்ந்த பொழுது தாக்குவதோ, அவர்கள் அறியாத ஒன்று. இவ்வாறு வீர வாழ்வு வாழ்ந்த பண்டைத் தமிழர்கள் காதலிலும் தனித்துவம் உடையவர்களே.

கிரேக்க இலக்கியம் கண்டெடுத்த பேரழகி ஹெலன் பேரரசன் ஒருவனுக்கு மனைவியாக இருந்தும், மாற்றான் ஒருவனைக் காதலிக்கிறாள். காதலித்த அளவிலே நிற்காது கட்டிய கணவனை விட்டு விட்டு கண்டவனுடன் கலம் ஏறவும் துணிந்து விடுகிறாள், ஆனால் பைந்தமிழ் புலவர்கள் வடித்தெடுத்த பழந்தமிழ்ப் பெண்களோ கட்டிய கணவன் கண் கலங்கச் செய்த பொழுது கூட அவனைக் கண் கண்ட கடவுள் என்று கருதி வழிபட்டவர்கள், செந்தமிழ் சுடர் தொடியார் 'இம்மை மாறி மறுமையாயினும் நீயாகிய என் கணவயானாகிய நின் நெஞ்சு நேர்பவள்' என்று இந்தப் பிறவியில் மட்டுமல்லாது மறுபிறவியிலும் தன்னுடைய கணவனையே காதலனாகஅடையவேண்டும் என்று கருதுவார்களேதவிர, கட்டிய கணவனை தம் நெஞ்சத்தில் வைத்து வழிபடுவதில் இருந்து என்றுமே தவறமாட்டார்கள். □

ஓவியர் அ. சீனு

# அல்வாயில் மருத்துவ பரிசோதனை முகாம்

## 500ற்கு அதிகமானோர் பயன்

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகம் அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலயத்தில் 500 ற்கு மேற்பட்டவர்களுக்கு அண்மையில் மருத்துவ பரிசோதனை முகாம் ஒன்றினை நடத்தியுள்ளது.

இம்முகாமில் கண் சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி எஸ். குகதாசன் கண் பரிசோதனையை மேற்கொண்டார்; பரிசோதனை செய்யப்பட்டவர்களுள் 14 பேருக்கு விழிவெண்படலச் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளதாக கழகத்தின் தலைவர் லயன். என். சச்சிதானந்தன் தெரிவித்தார்.

மேலும் இம் முகாமில் பரிசோதனை செய்யப்பட்டவர்களில் 20பேர் நீரிழிவு வியாதியினால் பிடிக்கப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். (உ-77)

# மடு யாத்திரிகர்கள் மீது கடும் சோதனை

(வவுனியா)

மடுத் திருப்பதிக்குச்சென்று திரும்பிய தென்னிலங்கை யாத்திரிகர்கள் வவுனியா பிரமணாலங்குளம் சோதனைச் சாவடியில் வைத்து கடுமையான சோதனைக்குள்ளாக்கப்பட்டதுடன் இழிசிக்கப்பட்டதாகவும் தென்னிலங்கை யாத்திரிகர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

இதேவேளை தாங்கள் மடுவில் தங்கியிருந்த போது தமக்கு எதுவித அசௌகரியங்கள் ஏற்படவில்லை எனவும், மடுவில் இடம் பெற்ற தெருக் கூத்துக்கள் தம்மை மிகவும் கவர்ந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (வ)

## கட்டுநாயக்கா

# விமானத்தள தாக்குதல் 9 ஆயிரத்து 500 கோடி நட்டம்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலை அடுத்து அங்கு தரித்து நின்ற விமானங்களின் சேதம் மற்றும் உல்லாசப் பயணத் துறைக்கு சுமார் 9 ஆயிரத்து 500 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில்; கட்டுநாயக்கா விமான நிலையத்திற்கும், உல்லாசப் பயணத்துறைக்கும் ஏற்பட்ட இந்த நட்டம்பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு கடந்த ஏழு வருடங்களில் கல்வித்துறைக்கு செலவிட்ட பணத்திற்கு சமமாகும்.

நாட்டில் தற்போது நடைபெற்று வரும் கெரில்லா யுத்தத்தை நேரடி யுத்தத்தின் மூலம் முடிவிற்கு கொண்டு வர முடியாது. இதனால் பாரியஅழிவை எதிர் கொள்ள வேண்டி ஏற்படும். இந்த யுத்தத்தை முடிவிற்கு கொண்டு வருவதன் மூலம் தேவையற்ற மனித உயிரிழப்புக்களை தவிர்த்துக்கொள்ள முடியும், விடுதலைப் புலிகள் மேற்கொண்டு வரும் குண்டுத் தாக்குதல்களினால் பெரும் பொருளாதார சீரழிவு ஏற்பட்டுள்ளது என்று மேலும் தெரிவித்துள்ளார். (வ)

# மாதாந்தக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் நாளை காலை 9.30 மணிக்கு மாநகர சபைக்கட்டடத்தில் இடம் பெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு யாழ். மாநகர முதல்வர் என். ரவிராஜ் தலைமைதாங்குவார். (உ-10)

## பெற்றோரை இழந்த

# பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு

# கனடா தமிழ் அமைப்பு உதவி

(தென்மராட்சி)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் போர் அனர்த்தங்கள் காரணமாகப் பெற்றோர்களை இழந்துள்ள பிள்ளைகளின் கல்வியைக் கருத்தில் கொண்டு கனடாவிலுள்ள தமிழ் அமைப்பொன்று வளர்ப்புப் பெற்றோர் திட்டத்தை அமுல்செய்ய முன்வந்துள்ளது.

இதனடிப்படையில் குடாநாட்டிலுள்ள பிரதேச செயலர் பிரிவுகள் தோறும் இத்திட்டத்துக்கான பயனாளிகளைத் தெரிவு செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

திட்டத்தின் முதல் கட்டமாக சங்கானை பிரதேச செயலர் பிரிவில் இருந்து 26 பாதிப்படைந்த பிள்ளைகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான நிதியுதவியாக மொத்தம் 31 ஆயிரத்து 500 ரூபாவை பிரதேச செயலர் கலாநிதி க. குணராஜா வங்கிக்கணக்குகள் ஊடாக வழங்கியுள்ளார்.

இதில் இணைத்துக் கொள்ளப்படும் பிள்ளைகளுக்கு மாதாந்தம் 500 ரூபா முதல் இரண்டாயிரம் ரூபா வரை வங்கிக் கணக்குகள் ஊடாக வழங்கப்படும்..

இத்திட்டத்தின் யாழ். குடாநாட்டு இணைப்பாளராக கலாநிதி க. குணராஜா செயற்பட்டு வருகின்றார். (உ-77)

# அமைச்சர் இலண்டன் பயணம்

(கொழும்பு)

அமைச்சர் றொனிடிமெல் சிலதினங்களுக்குமுன் இலண்டன் பயணமானார்.

பத்துப்பேர்கொண்ட குழுவிற்கு தலைமைதாங்கிச சென்றஇவர் கப்பல்கட்டணம் குறைப்பது சம்பந்தமாக வர்த்தக பிரமுகர்களுடன் பேச்சுநடத்துவார் என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ)

# விபத்தில் கால் முறிவு

(மந்திகை)

வேகமாகச் சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிலுக்கு குறுக்கே நாய் ஓடியதால் ஏற்பட்ட விபத்தில் கால் முறிந்த நிலையில் இளைஞர் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கடந்த வியாழனன்று நெல்லியடிப் பகுதியில் நடைபெற்ற இவ் விபத்தில் நுணாவிலில் இருந்து இடம்பெயர்ந்து நெல்லியடியில் வசித்து வரும் ஐயாத்துரை இராசகுமார் (வயது - 20) என்பவரே கால் முறிந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டுள்ளார் (உ-23)

# இலக்கணம் கற்பித்தல் ஆக்கத்திறன் வளர்த்தல்

## கருத்தரங்கு புதனன்று

(புலோலி)

வடமராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 9, தரம் 10 வகுப்புக்களில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான 'இலக்கணங் கற்பித்தலும் ஆக்கத் திறன் வளர்த்தலும்' கருத்தரங்கும் செயலமர்வும் 22 ஆம் திகதி புதன்கிழமை நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஆசிரியர் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி வலயப் பாடசாலைகளில் தரம் 9, தரம் 10 வகுப்புக்களில் கல்வி கற்பிக்கும் சகல ஆசிரியர்களும் தரம் 9, தரம் 10 தமிழ்ப் பாடநூல்களுடன் கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். சிவராஜா அறிவித்துள்ளார். (உ-52)

# மிதிவெடியில் படுகாயம்

(வவுனியா)

கிளிநொச்சிப் பகுதியில் தனது காணியைத் துப்புரவு செய்துகொண்டிருந்த குடும்பப்பெண்ணொருவர் மிதிவெடியில் சிக்கி படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நடராஜா [illegible] மலர் (வயது51) என்ற பெண்ணே மண்வெட்டியால் நிலத்தை கொத்தியபோது மிதிவெடி வெடித்ததனால் படுகாயமடைந்தவராவர். (ந)

# வலயக்கல்வி பணிப்பாளர்கள் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருடன் கடந்த 14 ஆம் திகதி நடைபெற்றவலயக் கல்விப் பணிப்பாளர்கள் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டதன் பிரகாரம் பாடசாலைகளில் கற்பித்தலுக்குத் தேவையான இரசாயனத் தேவைகள் பற்றிய முழுமையான விபரத்தை பாடசாலை ரீதியாக ஆங்கிலத்தில் தயாரித்து 19 ஆம் திகதிக்கு முன் மூன்று பிரதிகளை நேரில் கையளிக்குமாறு சகல வலயக் கல்விப்பணிப்பாளர்களுக்கும் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் என். தணிகாசலம் பிள்ளை பணித்துள்ளார். (உ-10)

# ஏறாவூரில் கடை எரிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஏறாவூரில் உள்ள கடை ஒன்று இனந் தெரியாத நபர்களினால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

நேற்று இரவு நடை பெற்ற இச் சம்பவத்தில்கடை எரிந்து நாசமாகியதுடன் கடை உரிமையாளர் மீது பெற்றோல் குண்டு வீச்சும் இடம் பெற்றுள்ளது. இதனால் படுகாயமடைந்த உரிமையாளர்வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் ஹிஸ்புல்லா அணியைச் சேர்ந்தவரென்றும் இத்தகைய தாக்குதல்கள் அரசியல் பழிவாங்கலாக இருக்கலாமெனவும் கருதப்படுகிறது. (ந-5)

இன்று செல்வச் சந்நிதி கொடியேற்றம்

# ஏற்றம்நல்கும் உயிர் மூச்சே

ஆறுபடை வீடுனக்கு அயலார் ஊரில்
தேறுமொரு ஐந்துண்டு ஈழ நாட்டில்
கூறுபட நொருங்கியதோ எனதுவீடு
மாறுபடா திருக்கின்றேன் உந்தன்கோல
பேறுதரும் திருவிழிகள் பன்னிரண்டும்
தேறுதலை எனக்களிக்க நாளும் ஐயா
மாறுபடு சூரனையே வதைத்த பாணி
நூறுதரம் எனை அணைக்க மறக்கலாமோ

அருள் பொங்கும் ஆலயங்கள் பலவும்மேவி
இருள் அகல வேண்டுமென்று ஏங்கிநின்றேன்
பெருவாழ்வு தருமுருகன் பேசாப் பொருளாக
வருவல்லி ஆற்றங்கரை தனிலே மேவி
வருமடியார் வினையகல வடிவேல் கொண்டு
மருள் அகல மிடியகல வீதியுலா வருதற்கான
கருது முயர் விழாவாக கொடி யேறுமின்று
பெருமானை துதித்துய்ய வருமடியார் கோடி

ஆற்றங் கரையானே அருள் பொங்கும்அயிலவனே
ஏற்றம் தனை நல்கும் எந்தன் உயிர் மூச்சே
மாற்றான் மனம்மாற கூர்வேல் தனைவிடுக
கூற்றக் கொடுங்கோலின் நாற்றங் காலழிய
மாற்றம் உரைத்திடப்பா மாறுபடாப் பிள்ளைசுதன்
ஏற்றம் அடையட்டும் எம்மவர்கள் ஏற்றமுற
போற்றுமொரு ஆட்சியதை பொலிவாகத்தான்
சமைத்து
நாற்றிசையும் நாட்டட்டும் நமைக் காக்கும்
வேலோனே.

- கோ. சி. வேலாயுதம்

# பார்போற்ற வழிகாட்டு

செல்வமிகு சந்நிதியில் கோயில் கொண்ட முருகா!
நல்லருளை எமக்களிக்கத் தயங்குவதேன் ஐயா
போர்க்களமாய் நம்நாடு இருப்பதேன் முருகா!
பார்போற்ற நாம்வாழ வழிகாட்டு ஐயா!

வேல்தாங்கி அருளிட அமர்பவனே முருகா!
வல்லமையைத் தந்திடவே வந்திடுவாய் ஐயா
மண்ணிலினி கொடும்போரை அகற்றிவிடு முருகா!
மாண்புமிகு நல்வாழ்வை தந்துவிடு ஐயா!

சமூகசோதி கா. கணேசதாசன்

# மணிலா உணவுவிடுதியில் தீ விபத்து

# 70 பேர் தீயிற் கருகிப் பலியாகினர்

## மயக்கம் தெளியாத நிலையில் பலர் மீட்பு

உலக தரிசனம்

(மணிலா)

பிலிப்பைன்ஸ் தலைநகரான மணிலாவில் அமைந்துள்ள உணவு, விடுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் 70 பேர் பலியாகியுள்ளனர்.

நேற்றுக் காலை உணவு விடுதியில் மேற்படி தீ விபத்து இடம் பெற்ற வேளை, அபாயச் சமிக்ஞை எதுவும் இடம் பெறாததால பாதுகாப்பு ஊழியர் ஒருவர் துப்பாக்கி வேட்டுக்களை பிரயோகித்தும் அங்கு நின்றவர்கள் அதனைக் கருத்தில் கொள்ளவில்லை என்றும்,

இதனாலேயே அதிக எண்ணிக்கையானோர் பலியாக நேரிட்டது எனவும் தீ அணைப்பு படையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விபத்து நடை பெற்ற வேளை வாடிக்கையாளர் உட்பட 172 பேர் அங்கு இருந்ததாகவும், பலியானோர் தவிர ஏனையோர் மயக்கமடைந்த நிலையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதிகமானோர் தீயினால் ஏற்பட்ட புகை மண்டலத்தில் சிக்கி மூச்சுத் திணறியே பலியாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

(உ-7)

சர்வதேச மன்னிப்புச் சபையின்

# செயலாளர் நாயகமாக ஆசிய நாட்டவர் தெரிவு

(லண்டன்)

மனித உரிமை அமைப்புக்களில் ஒன்றான சர்வதேச மன்னிப்புச் சபையின் புதிய செயலாளர் நாயகமாக பங்களாதேஷைச் சேர்ந்த ஐலன்ட் கான் என்ற பெண்மணி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சர்வதேச மன்னிப்புச் சபையின் 40 ஆண்டு வரலாற்றில் பெண் ஒருவர் செயலாளர் நாயகமாக பதவி ஏற்றது இதுவே முதல் தடவை.

அத்துடன் இப்பதவி வகிக்கும் முதலாவது ஆசியர் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த 20 வருடங்களாக ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராக கடமையாற்றிய ஐலன்ட் கான் சர்வதேச மன்னிப்புச் சபையின் 7 ஆவது செயலாளர் நாயகமாக தெரிவு செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (உ-7)

# பலமுனை நெருக்கடிகள் மத்தியில் தமிழக முதல்வர் சிக்கித் தவிப்பு

[சென்னை]

தமிழக முதல்வர் ஜெயலலிதா பல முனை நெருக்கடிகளை எதிர் நோக்கியிருப்பதாக அரசியல் நோக்கர்கள் கருதுகிறார்கள் :

கருணாநிதியைத் தாக்கிய விடயத்தில் கருணாநிதியும் நீதிவழங்கப்பட வேண்டும் என்று அடிக்கடி ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும் எதிர்ப்புக் கூட்டங்களும் நடத்தி முதல்வருக்கு தலையிடியைக் கொடுத்து வருகிறார்.

இதேவேளை ஜெயலலிதாவின் வளர்ப்பு மகனும் சிவாஜி கணேசனின் பேர்த்தியின் கணவருமாகிய சுதாகர் போதைப் பொருள் கடத்தல் வழக்கில் சிறையில் இருப்பதும் இவருக்கு குடும்ப தலையிடியாக இருக்கிறது.

தமிழகப் பத்திரிகையாளர்கள் இரண்டு முறை திட்டமிட்டு மாநில அரசால் தாக்கப்பட்டிருக்கிறார்கள் இவர்களின் உண்ணாவிரதப் போராட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் ஜெயலலிதா அரசிற்கு பெரும் தலையிடியாக இருக்கிறது.

மத்திய அரசு மூன்று ஆணையாளர்களை விடுவிக்குமாறு தமிழக அரசுக்கு கடிதம் அனுப்பியிருந்தது மூன்று உயர் ஆணையாளர்களும் மாநில அரசிற்குத் தேவையென்று ஜெயலலிதாவினால் தட்டிக் கழிக்கப் பட்டது.

ஆனால் மத்திய அரசுவிடாக் கண்டனாக மூவரையும் திரும்பவும் கேட்டிருக்கிறது இதற்கு ஜெயலலிதா வோ மாநில அரசோ என்ன சொல்வதென்று தெரியாது திகைக்கிறது.

பாட்டாளி மக்கள் கட்சியும் அ.தி.மு.கவிலிருந்து விலகி தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இணைந்து விட்டது த.மா.காவும் எப்போது விலகுமோ என்று தெரியாது.

ரான்சி நில பேர ஊழல் வழக்கில் ஜெயலலிதா மீது சிறைத்தண்டனை விதிக்கப் பட்டிருப்பதும், குற்றம் சாட்டப்பட்டு சிறைத்தண்டனை பெறவேண்டியவர் அரசியற் பதவிகள் வகிக்க முடியாது என்று சட்டம் நிரூபிக்கப் போகிறது.

ஜெயலலிதா மீதான இத்தகைய பன்முனைத்தாக்குதல், அதனால் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் பற்றி நோக்கர்கள் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

(து)

# விண் வெளியில் புதிய சூரியக் குடும்ப அமைப்பு

## அமெ. விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

(வாஷிங்டன்)

அமெரிக்க விண் வெளி ஆராய்ச்சியாளர்கள் பிறிதொரு சூரியக் குடும்பஅமைப்பொன்றை கண்டு பிடித்துள்ளனர்.

46 ஒளியாண்டு தொலைவிலுள்ள, சூரிய குடும்பத்தை ஒத்த அமைப்பை விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்திருப்பது பல்வேறு ஊகங்களை தோற்றுவித்திருப்பதாக தெரிகிறது.

(உ-5)

பலூனில்

# உலகைச் சுற்றிவரும் முயற்சி கைவிடப்பட்டது

[பிறேசில்]

தன்னந்தனியாக பலூன் மூலம் உலகத்தைச் சுற்றி வரும் அமெரிக்கரான ரீபெட்லர் பயணத்தை இடையிலே கைவிட்டுள்ளார்.

அத்திலாந்திக் கடலோரப் பகுதிகளில் நிலவும் மிகவும் கொடூரமான கால நிலையே இதற்கு காரணமாகுமென்று தெரிவிக்கப்படுகிறது.

மணிக்கு 68 கிலோ மீற்றர் வேகத்தில் 15 நாட்களாக உலகை வலம் வந்துகொண்டிருந்த இவர் இப்போது பலூனை தரையிறக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாக தரைக் கட்டுப்பாட்டதிகாரி தெரிவித்தார்.

பிறேசிலைச் சேர்ந்த கடற்கரைப் பகுதியில் எந்த நேரமும் பலூனை இறக்கலாமென்று அந்த அதிகாரி தெரிவித்தார்.

(து)

# வியக்க வைக்கும் விந்தை நிகழ்வுகள்

★ 'அட்டைகள்' ஆகிய மொட்டைத்தலைகள்

ரகசியச் செய்திகளை அனுப்ப புறா, கிளி முதல்

# செய்தித் துளிகள்

## சமாதான நீதிவான் நியமனம்

(இணுவில்)

யாழ். மீசாலை வீரசிங்க மகாவித்தியாலய பிரதி அதிபர் வே.நாகராசா அகில இலங்கை சமாதான நீதவானாக நியமிக்கப் பட்டுள்ளார். (சு-09)

## அபிவிருத்திச் சங்கக் கூட்டம்

(புலோலி)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அபிவிருத்திச் சங்கக் கூட்டம் இன்று மு.ப 10.00 மணிக்கு கல்லூரி அதிபர் எம். ஸ்ரீபதி தலைமையில் நடைபெறுமென சங்கச் செயலாளர் சட்டத்தரணி பீ. குமாரசாமி அறிவித்துள்ளார். (உ- 52)

## மாணவர் நிலைய

## யெகோவாவின் மாவட்ட மாநாடு

[யாழ்ப்பாணம்]

யெகோவாவின் சாட்சிகளின் மாவட்ட மாநாடு கடவுளுடைய வார்த்தையை கற்பிப்போர்' என்னும் பொருளில் வெள்ளி முதல் இன்று வரை மானிப்பாய் நகர சபை மண்டபத்தில் நடை பெற்று வருகிறது.

இன்று மு.ப 11.00 மணிக்கு யெகோவாவின் அதிகாரத்திற்கும் மரியாதை காட்டுங்கள் எனும் பொருளில் நாடகமும் பின்னர் பி.ப 1.50 மணிக்கு 'சத்தியத்தை எல்லா தேசத்தாருக்கும் யார் கற்பிக்கிறார்கள்'? எனும் பொருளில் பொதுப் பேச்சும் இடம் பெறும். (உ)

## பிரயாணிகள் தங்குமடம்

[புலோலி]

பருத்தித்துறை நகர சபையால் பருத்தித்துறை பஸ்

# வியக்க வைக்கும் விந்தை நிகழ்வுகள்

## ★ 'அட்டைகள்' ஆகிய மொட்டைத்தலைகள்

ரகசியச் செய்திகளை அனுப்ப புறா, கிளி முதல் கொண்டு நவீன தொழில் நுட்பச் சாதனங்கள் வரை எத்தனையோ முறைகளை கண்டுள்ளோம். ஆனால் முற்காலத்தில் இரகசியச் செய்திகளை அனுப்ப எகிப்தியர்கள் மேற்கொண்ட முறையைப் பார்த்தால் வியக்காமலிருக்க முடியாது.

பண்டைய எகிப்தியர்கள் ரகசியச் செய்திகளை அனுப்ப தங்களுடைய அடிமைகளின் தலையை மொட்டை அடித்து அதில் சேதிகளை சுருக்கமாக எழுதிவிடுவார்களாம். பின்பு தலையில் முடிவளர்ந்தவுடன் அவர்களை செய்தி சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பி விடுவார்கள், அடிமை போய்ச் சேர்ந்தவுடன் உரிய இடத்தில் அவ்வடிமைகளின் தலையை மீண்டும் மொட்டை அடித்து செய்தியைப் படித்துக் கொள்வார்களாம். இடங்காணாது விட்டால்... என்று யோசிக்கிறீர்களா? இடங்காணவிட்டால் இருக்கவே இருக்கு இன்னொரு மொட்டை!

## ★ பூமியின் நிறை என்ன?

நாம் வாழும் இந்தப் பூமி எவ்வளவு பாரமானது என்று எப்போதாவது சிந்தித்துப் பார்த்ததுண்டா?

66 என்ற எண்ணுக்குப் பின்னால் இருபது பூஜ்ஜியங்களைப் போட்டுக் கொள்ளும் போது ஓர் எண் கிடைக்கிறதல்லவா? அத்தனை தொன் எடைகொண்டதே ($S-393 \times 10^{24}kg$) இப் பூமியாகும்; அதுசரி பூமியின் நிறையை எந்தத் தராசில் போட்டு நிறுத்தார்கள் என்று சந்தேகம் எழுகிறதா?

பூமியின் நிறை அளக்க எந்தத் தராசும் பயன்படுத்தப்படவில்லை இரண்டு பொருட்களின் எடை, அவற்றிற் கிடையே உள்ள தூரம் ஆகியவற்றைப் பொறுத்தே ஒன்றை ஒன்று கவரும்' என்றொரு ஈர்ப்பு விதி பௌதிகத்தில் உள்ளது. அவ்விதியைத் துணையாகக் கொண்டே பூமியின் நிறை கணிப்பிடப்பட்டுள்ளது.

-அவதானி-

---

...பட்டது;

ஆனால் மத்திய அரசுவிடாக் கண்டனாகமுவரையும் திரும்பவும்கேட்டிருக்கிறது இதற்கு ஜெயலலிதா வோ மாநில அரசோ என்ன சொல்வ...

## எட்டுப் பேர் வெட்டிக் கொலை

[இஸ்லாமபாத்]

தனது சம்மதமில்லாமல் திருமணம் செய்து கொண்ட தங்கை மற்றும் அவரின் கணவர் உட்பட 8பேரை கொலை செய்த ஒருவரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

பாகிஸ்தானின் ஒதுக்குப்புறமான கிராமம் ஒன்றில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கொலையாளி தலைமறைவாகியுள்ளார். [து]

## இந்தோனேஷிய சுதந்திர தினம்

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவின் சுதந்திர தினம் வெள்ளியன்று கொண்டாடப்பட்டது.

அதிபர் மேகவதி சுகர்ணோ புத்ரி தேசியக் கொடியை ஏற்றி சுதந்திர தின வைபவத்தை ஆரம்பித்து வைத்தார்.

5 ஆயிரம் பேர் கலந்து கொண்ட சுதந்திர தின விருந்திற்கு இந்தோனேஷியா அதிபர் மேகவதி விடுத்த அழைப்பை ஏற்றுக் கொள்ளாத முன்னாள் அதிபர் அப்துல்ரகுமான் வாஹிட் தீவொன்றிலுள்ள தனது இல்லத்தில் அந்த நாளைக்கழித்து சுதந்திர தினக் கொண்டாட்டத்தைப் புறக்கணித்தார். (து)

---

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அபிவிருத்திச் சங்கக் கூட்டம் இன்று மு.ப 10.00 மணிக்கு கல்லூரி அதிபர் எம். ஸ்ரீபதி தலைமையில் நடைபெறுமென சங்கச் செயலாளர் சட்டத்தரணி பீ. குமாரசாமி அறிவித்துள்ளார். (உ- 52)

## மாணவர் நிலைய திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் மாணவர் நிலைய கட்டடத் தொகுதி ஒன்று நாளை திங்கட்கிழமை மு.ப. 10.00 மணிக்கு துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையினால் திறந்து வைக்கப்படவுள்ளது. [செ]

## பொன்னாடை போர்த்திக் கௌரவம்

[யாழ்ப்பாணம்]

கந்தரோடை சுன்னாகம் வீரகத்தி விநாயகர் ஆலயத்தினர் மூதறிஞர் சிவசரவணபவனை (சிற்பி) பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர்;

வீரகத்தி விநாயகர் ஆலய அலங்கார உற்சவ காலத்தில் தொடர் சமயச் சொற்பொழிவு ஆற்றிய மூதறிஞருக்கு விழா நிறைவின் போது மருதடி விநாயகர் ஆலயகுரு ஜெயக்குமார் சபையினர் சார்பில் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். இதே வேளை உற்சவ கால குருவும் கௌரவிக்கப்பட்டார். [து]

---

... பி.ப 1.50 மணிக்கு 'சத்தியத்தை எல்லா தேசத்தாருக்கும் யார் கற்பிக்கிறார்கள்'? எனும் பொருளில் பொதுப் பேச்சும் இடம் பெறும். (உ)

## பிரயாணிகள் தங்குமடம்

[புலோலி]

பருத்தித்துறை நகர சபையால் பருத்தித்துறை பஸ் நிலையத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் பிரயாணிகள் தங்குமட நிர்மாண வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

இப் பிரயாணிகள் தங்குமடம் வெகு விரைவில் திறந்து வைக்கப்படுமென நகர சபை உப தலைவர் எஸ். மணிவண்ணன் தெரிவித்தார். [உ-52]

## 2 லட்சம் நிதியுதவி

(இணுவில்)

மிகவும் பழைமை வாய்ந்த உடுவில் மல்வம் ஞானவைரவர் தேவஸ்தான புனரமைப்புப்பணிக்கென வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் 2 லட்சம் நிதி வழங்கப்பட்டுள்ளது. (உ-49

## இடம் மாற்றம்

(கல்வயல்)

புலோலி கால்நடை உற்பத்தி சுகாதாரதிணைக்களத்தின் பின்பகுதியில் சனிக்கிழமைகளில் இயங்கி வந்த கோழிச்சந்தை தற்போது புலோலி சாரையடிப்பகுதியில் உள்ள கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க தலைமை அலுவலகத்தில் இடம் மாற்றப்பட்டுள்ளது. (உ-111

அஞ்சுவ(து) அஞ்சாமை
பேதைமை ; அஞ்சுவ(து)
அஞ்சல் அறிவார் தொழில்
- குறள்

## வலம்புரி

### புரிகிறதா ரணிலின் போக்கு !

எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பின் கூட்டம் நேற்று முன்தினம் பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் புலிகளுக்கெதிராக அரசு இரசாயன ஆயுதங்களைக் கொள்வனவு செய்தமைக்குக் கண்டனம் தெரிவிக்கும் தீர்மானமொன்றை கூட்டணியின் மட்டு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் யோசப்பரராஜசிங்கம் கொண்டு வந்த போது அதனை எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்கா தட்டிக் கழித்துவிட்டார்.

சர்வதேசத்தில் தடை செய்யப்பட்ட இரசாயன ஆயுதங்களை அரசுகொள்வனவு செய்திருக்குமாயின் அதன் விளைவுகள் பாரதூரமாகவே யிருக்கும். நிலைமை அவ்வாறு இருந்த போதிலும் அவ் விடயத்தை ஏனோ தானோ என்ற போக்கில் ரணில் தட்டிக் கழித்தது ரணிலுக்குமுண்டு கொடுக்கும் தமிழ் எம்பிக்களுக்கு நல்லதொரு பாடமாகும் தமிழர்களின் விடயத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஐக்கியதேசியக் கட்சியும், கொழுக்கட்டையும் மோதகமும் என்பதை இப்போதாவது தமிழ் எம்பிக்கள் உணர்வார்களா என்பது கேள்விக்குறியே.

ஐ. தே. கட்சி எப்படியாவது பொ. ஜ. ஐ. முன்னணி அரசை விழுத்தி தான் ஆட்சி அமைக்கும் நோக்கத்தில் மும்முரமாக ஈடுபட்டுள்ளது. இதற்கு தமிழ் எம்பிக்களின் உதவி தேவையாகவுள்ளது. ஐ. தே கட்சி ஆட்சியமைத்தால் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்குமென தமிழ் எம்பிக்கள் நம்புவார்களாயின் அதனை விட மடமைத்தனம் வேறொன்றுமிருக்க முடியாது.

ஏனெனில், ஒருகட்டத்தில் தன்னை பிரதமராக நியமித்தால் தேசிய அரசு அமைக்கத் தயார் என ரணில் ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளார். அவ்வாறு தேசிய அரசுஅமைக்கப்பட்டு ரணில் பிரதமரானால் தாங்கிப்பிடித்த தமிழ் எம்பிக்களின் நிலை எப்படியிருக்குமென்பதை அனுபவத்தின் மூலமே அறியவேண்டும்.

ரணிலுக்கு தமிழ் எம்பிக்களில் நம்பிக்கையிருந்திருந்தால், புதிய சபாநாயகர்பதவியை, ஆனந்தசங்கரிக்குக் கொடுத்திருக்கலாமல்லவா?

பரம பிதா காட்டிய பாதை

## பற்றிய பாவங்களை உதறித் தள்ளி விட்டு

# இறை வாழ்வின் நன்மைகளை இறுகப்பற்றுவீர்



மனிதன் ஓயாமல் உழைத்துக் கொண்டே இருக்கிறான் காரணம் தான் நினைத்ததை அடைந்து விட வேண்டுமென்று. அதனை அடைந்து விட்டாலும் அவன் மனம் நிறைவு காண்பதில்லை. அதனை விட மேலான இன்னொன்றை அடைய வேண்டுமென்று அவன் மனம் அவாக்கொள்கின்றது. மனிதன் எப்பொழுதெல்லாம் ஒன்றில் அளவு கடந்த பற்றுக் கொள்கின்றானோ அப்பொழுதெல்லாம் உள்ளத்து அமைதியை இழந்து விடுகிறான் இதனாலேயே அமைதியை நிம்மதியைத் தேடும்வழிகளிலேதிசை மாறிச் செல்கிறான். 'இவ்வுலக வாழ்வில் கவனம் செலுத்துவதும் இனிவரும் வாழ்வைப் பற்றிக் கவலை கொள்ளாமல் இருப்பதும் பயனற்றதாகும்.'

உண்மையில்உயர்ந்தசொற்கள் ஒருவனைத் தூயவனாகவோ, நீதிமானாகவோஆக்குவதில்லை. ஆனால் ஒழுக்கமான வாழ்க்கையே ஒருவனை இறைவனின் நண்பனாகஆக்க வல்லது. கிறிஸ்துவின் மொழிகளை முழுமையோடும்சுவையோடும் புரிந்து கொள்ள விரும்புகின்றவன் தனது முழு வாழ்வையும் கிறிஸ்துவின் வாழ்வுக்குஒத்ததாக ஆக்க வேண்டும். 'காண்கிறதனால் கண்கள் நிறைவடைவதில்லை. கேட்கிறதினால் செவிகள் நிறைவு பெறுவதுமில்லை; (சங்கத்திரு உரை 1;8) என்னும் பழமொழியை நாம் அடிக்கடி நினைவில் கொள்ள வேண்டும்;

### பி.ஏ. அருள்தாசன்

**மன உறுதி வேண்டும்**

எமது வாழ்க்கை அங்கலாய்ப்பானதாக அமைந்து விடக் கூடாது. பயன்தரக் கூடியவைகளையும் அவசியமானவைகளையும் விலக்கி விட்டு ஆச்சரிய மூட்டுபவைகளையும், தீமை பயப்பவைகளையும் மிதமிஞ்சி விருப்பம் கொள்வது மடமையானசெயலாகும். அத்தனையும் ஒன்றாக எண்ணி அத்தனையையும் ஒன்றில் இணைத்து காண்கின்றவர் திடமான இதயம் கொண்டவராகவும் இறைவனின் நிலையான அமைதி பெற்றவராகவும் இருக்க முடியும். இதனை புனிதபவுல் இவ்வாறு கூறுகிறார். 'நாம் பற்றிக் கொண்டிருக்கும் எந்தப் பாவத்தையும் உதறித் தள்ளிவிட்டு நமக்குக் குறிப்பிட்டுள்ள பந்தயத்தில் மன உறுதியோடுஓடுவோமாக நம்பிக்கையைத் தொடங்கி வழி நடத்துபவரும் அதை நிறைவு செய்பவருமான இயேசுவின் மீது கண்களைப் பதியவைப்போம் [எபி 12:2]என்றுஎமது நோக்கையும் எமது குறிக்கோளையும் தெளிவு படுத்துகிறார்;

**இறைவனோடு நெருக்கம்**

எமது செல்வத்திலோ' வலிமை பெற்ற நண்பர்களிலோ பெருமை கொள்ளாமல் எல்லாம் தந்த இறைவன் மேல் நம்பிக்கையும் அவரிலே மகிமையும் கொள்ள வேண்டும். தாழ்ச்சி உள்ள உள்ளமாக எமது உள்ளத்தை மாற்றிக் கொள்ளும் போது இறைவனின் அருளையும் ஆசீரையும்அடைந்து கொள்ளலாம்: இன்னல்கள், இடையூறுகள் இல்லாத வாழ்க்கையே இல்லை. இந்த இன்னல்கள் இடையூறுகள் வரும்பொழுது தான் நாம் இறைவனுடன் நெருக்கமான உறவு கொள்கின்றோம்.

ஒருவன் தீமைக்குஎதிராகப் போராடாமல் சோம்பி இருக்கும் ஒவ்வொரு நாளும் அவனது வலிமை குன்றிக் கொண்டே போகின்றது: அலகையானவன் அவனுக்கு எதிராக வன்மை பெற்று வருகின்றான். எல்லாத் தீய சோதனைக்கும் தொடக்கம் மனத்தின் நிலையாமையும் இறைவனில் நம்பிக்கைக் குறைவுமே ஆகும்.

**அமைதியில் மகிழ்வு**

எனவே உள்ளும் புறமும் உள்ளவற்றை நாம் ஆராய வேண்டும். காலையில்செயலுறுதிகொள். மாலையில்செயல் சிந்தனை இவற்றில் எப்படி ஒழுகினாய் என்பதை ஆராய்ந்து பார்; ஏனெனில் இவற்றால் இறைவனையும் அயலாரையும் நாம் மனநோகச் செய்திருக்கலாம். உழைப்பின் பயன்களை நாம் அடைந்து கொள்ள நமக்குக் குறிப்பிட்டுள்ள சீரிய பந்தயத்தில் ஓடி வெற்றி வாகை சூட பயனற்ற கவலைகள் அனைத்தையும் வெட்டியெறிந்துமீட்புக்கு உரியவற்றைஎமதாக்கிக் கொண்டு நிலையற்ற மகிழ்ச்சியைத் தேடாது தூய இதயத்தைச் சான்றாகக் கொண்டு, விண்ணக நன்மைகளில் கவனத்தைச் செலுத்துவதால் மண்ணகப் பொருட்கள் ஒன்றுமில்லாதவைகளாக இருக்கும். அப்போது அமைதியில் அதிக மகிழ்ச்சியும் இறை பராமரிப்பும் எம்மைத்தொடரும். □

சோதிட பலன்

# விஷு புத்தாண்டில் இராசிமாறும் கிரகங்கள்

# தருகின்ற பலன்கள் நல்லவையா? தீயவையா?

(தொடர்ச்சி)

**தனுராசி (மூலம், பூராடம், உத்தராடம், 1)**

இந்த ராசியில் பிறந்த அன்பர்களுக்கு குருபகவான் ஜூன் 13 வரை 6 ஆம் இடத்திலும் ஜூன் 13 லிருந்து 7 ம் இடமாகவும் அமைந்து பலன் செய்வார். சனீஸ்வரன் 5 ஆம் இடமாகவும் ஏப்ரல் 11 ல் இருந்து6ஆம் இடத்திலும்சஞ்சரித்து பலன்கள்நடக்கவுள்ளன;

ஜூன் 13லிருந்து வியாழன் 7 ல் மாறி வருவதால் பண விருத்தியும், பலவிதப் பொருள் சேரலும், நன்மையாகி வரும், பெரிய இடத்து ஆட்களின் நட்பு உதவியாதரவுகள் கிடைக்கவுள்ளன. காதல் நட்பு விசயங்கள் நன்மையாக விளங்கிவரும்; நண்பர் உறவினர் உதவி ஆதரவு வரவுள்ளது;

நோய்கள் தோன்றினாலும் சீக்கிரம் குணமாகிவிடும், உத்தியோகம், தொழில் கிடைக்கவுள்ளன : புதிய தொழில் முயற்சிகள் தோன்றி நன்மை கிடைக்கும், விவாகத் தடை தடங்கலிருக்கும். சிலருக்கு விவாகம் நடக்கப்பலன் உள்ளது; சிநேக நன்மை, கல்வித் தேர்வு, லாபம் வரவுள்ளன. தாயாருக்கு தேகசுக விருத்தி விளங்கும். தகப்பனுக்கு காணி, மனை லாபம், வாகன சுகம், பணலாபம் தோன்றும். கடன்தொல்லைப்பிரச்சினை, நோய் சிக்கல் நீங்கிஆறுதல்வரும், பதவி புகழ் பட்டக் கல்வி லாபம் கிடைக்கும்; குடும்பத்தில் முரண்பாடுகள் தோன்றி அகலும், போட்டி, ரேஸ், பரிசுச் சீட்டு வெற்றி வாய்ப்புள்ளது. குழந்தை நன்மை தாமதமாகும், புத்திரர்களுக்கு மனக் கிலேசம், சுகக் குறைவுகள் விளங்கும், படிப்பில் மற்றும் தொழில் விசயங்களில் அவர்கள் சிக்கலைச் சந்திப்பார்கள். வெளிநாட்டுப் பயண லாபம் தோன்றும், கலைத்துறை லாபம், வியாபாரவிருத்தி, கல்வி மேன்மை தோன்றும், காணி, வீடு, வாகனம் போன்றவற்றால் நன்மை வரவுள்ளது.

சோதிடஞானி

**சண்மாஸ்டர்**

**சனீஸ்வரன் பலன்**

புத்திரர் பிரச்சினை, சத்துரு மற்றும் ரோகப் பிரச்சினை, கடன் அமைந்து தீரல், வாகன சுகக்குறைவு, நஷ்டங்கள் சிலபோது தோன்றும். ஏப்ரல் 11ல் இருந்து 6ல் சனி அமைவதால் மறைமுகத் தொழில் நன்மை, குடும்பத்தில் அடிக்கடி செலவினங்கள் ஏற்படுதல், சச்சரவுகள் நிலவுதல் அமையவுள்ளன. குடி, போதைப் பழக்கமுள்ளோருக்கு அவற்றால் செலவுக் கஷ்டம் தோன்றும், அலைச்சல் இடம் மாறுதல் வரும். புத்திரர்கள்சிலபோது, சிக்கல் சிரமம் சந்திப்பார்கள். வாகன சுகம், வேலையாட்களால் சகாயம் ஆதரவு விளங்கி வரும்; பிரயாண விசயங்களில் தடைகள் இருந்து வரும்; வழக்கு விசயம்வெற்றி அளிக்கும். மனைவி சுக்க குறைவு, சகோதரர்களுக்கு இடமாற்றம், பிரயாண லாபம் அமையும். உணவு, நித்திரை சுகம் குறையும், சில போது மனக்குழப்பம், நிம்மதிக் குறைவும் ஏற்படும், சிலருக்கு சகோதரர்கள் தொடர்பான விசயங்களால் முரண்பாடுகளை உண்டுபண்ணும், தொழில் செய்யும்இடங்களில் சிக்கல், சிரமம், அநாவசியப் பிரச்சினைகள் உண்டாகும்; அந்நியர், நண்பர் ஆதரவு உள்ளது;

**ராகு கேது பலன்**

ராகு 7ல் அமைவதால் குடும்பப் பிரச்சினை, தொழில் தகராறு, தொழில் பக்கரோகம், அலைச்சல் அமையும். கேது இலக்கினத்தில் இருப்பதால் சோம்பல், தெய்வ சிந்தனை, பிரயாண லாபம் சிலபோது அதிர்ஷ்டம் தோன்றும். 2002ல் 6ல்ராகுவும், 12ல் கேதுவும் அமைவதால் வழக்கு வெற்றி, பகைமை தீரல், யாத்திரை சுகம் ஏற்படும்;

**மற்றக் கிரகங்களின் பலன்:**

2001 புரட்டாதி வரை- வாகன சுகக்குறைவு, புத்திரர் தகராறு, பூமிலாபம், வழக்கு வெற்றி, குடும்பசுகம், பெண்களால் நன்மை, பதவிலாபம், பணவிருத்தி, தொழில் சிறப்பு அமையும், கல்வி முயற்சி தடை, குடும்பச் சச்சரவு, புத்திர விருத்தி தோன்றும், இடமாற்றம், உத்தியோகச் சிக்கல், அரசாங்க லாபம் வரவுள்ளன;

(3ஆம் பக்கம் பார்க்க)

## தினசரி தியானம்

### கோபுரம் தாங்கி

எனது ஆணவத்தை ஒதுக்கி வைத்து விட்டு இறைவா, உன்னை நான் வழுத்துவேனாக.

கோபுரத்தைதச் சுமந்து கொண்டிருப்பது போன்று கோபுரம் தாங்கி காட்சி கொடுக்கிறது. ஆனால், உண்மை அதற்கு நேர்மாறானது. கோபுரம் தாங்கியைத் தாங்குவது கோபுரம். உலகில் எத்தனையோ காரியங்களைத் தான் தாங்கிக் கொண்டிருப்பதாக மனிதன் எண்ணுகிறான். தன்னிலும் மிக்கதொரு சக்தி தன்னைத் தாங்கிக் கொண்டிருக்கிறது என்பதை மனிதன் அறிந்து கொள்வதில்லை.

என் செயினும் என் பெறினும்
என்னிறைவா ஏழையன் யான்
நின் செயலென் றுன்னும்
நினைவு வரக் காண்பேனோ?

-தாயுமானவர்-

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

# மடு சென்ற தென்னிலங்கை யாத்திரிகர்கள்
# மாவீரர் துயிலும்இல்லத்தில்அஞ்சலி செலுத்தினர்

தென்னிலங்கையில் இருந்து மடுதிருப்பதிக்கு சென்ற யாத்திரிகர்கள், விடுதலைப்புலிகளின் மாவீரர் துயிலும் இல்லங்களுக்குச் – சென்று மாவீரர்களின் கல்லறைகளில் தீபமேற்றியும், மெழுகுவர்த்தி கொளுத்தியும் வணக்கம் செலுத்தினர்.

மாவீரர்களின் தியாகத்தை புனிததன்மையுடன்நோக்கிய அவ் யாத்திரிகர்கள் அவர்களின்துயிலும் இல்லத்தைவீரர்களின் கோயிலாக மதித்து வணக்கம் செலுத்தியமை அகமகிழ்வான நிகழ்வாக அமைந்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அங்குஇடம் பெற்றகண்காட்சியில் 1999ம் ஆண்டு நவம்பர் மாதம் 20ந் திகதி மடுத்தேவாலயப் பகுதியில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதல் சம்பவம் காட்சியாக்கபட்டிருந்தது:

இதன்போது ஏற்பட்ட உயிரிழப்புக்கள் மக்களின் அவலம் ஏற்பட்டஅனர்த்தங்கள்ஆகியவற்றை வெளிப்படுத்தும் புகைப்படங்கள் மற்றும் சம்பவத்தை தெளிவுபடுத்தும் தத்தருபவிபரணங்கள் அங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

போரினால் ஏற்பட்டுள்ள சேதங்கள் மற்றும் அநாதைகளாக்கப்பட்ட சிறுவர்களின் நிலைமை அவர்களின்சோகம் ஆகியவையும் கண்காட்சியில் சித்திரிக்கப் பட்டிருந்தது

இதேவேளை கண்காட்சிகள் நாடகங்கள் மற்றும் வீரசாகச நிகழ்வுகள் ஆகியவற்றைப் பார்வையிட்ட மடு யாத்திரிகர்கள் போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் நல்வாழ்விற்காக அன்பளிப்புக்களை வழங்கினர் (இ)

## ஆறு புலிகள் உயிரிழப்பு

(வவுனியா)

திருகோணமலை திரியாய் பிரதான விநியோகப் பாதையில் கடந்த வியாழக்கிழமை காலை கடற்படையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலின் போது 6 விடுதலைப்புலி உறுப்பினர்கள் களப்பலியாகியுள்ளதாக புலிகளின் குரல் வானொலி நேற்று அறிவித்துள்ளது

அவர்களின் பெயர் விபரம் வருமாறு,

- மேஜர் செல்வமுருகன் அல்லது அன்பு (அமிர்தலிங்கம் மகன் யாழ் மாவட்டம்)
- லெப். கார்த்தினிசன் (இராஜேஸ்வரன் திருமலை)
- லெப் இசைச்செல்வன் [உதயகுமார் திருமலை]
- லெப் கலைச்செல்வி [மேகமலர் திருமலை]
- லெப் காந்தரூபி [சந்திரமதி திருமலை]
- லெப் பவித்திரா [பர்த்தினி திருமலை]

(ம)

## விசாரணைகளை நடத்த இந்தியக் குழு வருகை

(சென்னை)

கட்டுநாயக்கா விமானத்தளம் மற்றும் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் ஆகியவற்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்கு பாரத சிவில் விமானப் பாதுகாப்புக் குழு ஒன்று நேற்று சென்னையில் இருந்து கொழும்பு வந்து சேர்ந்துள்ளது:

சிவில் விமானப் பாதுகாப்பு ஆணையாளர் வி. ஜவாலி தலைமையில் ஆறு உறுப்பினர்களைக் கொண்ட விசாரணைக் குழுவினரே நேற்று கொழும்பு வந்து சேர்ந்துள்ளனர்.

கொழும்பு வந்துள்ள இந்தக் குழு கட்டுநாயக்கா விமானத்தளம், மற்றும் விமான நிலையம் ஆகியவற்றின் மீது இடம் பெற்ற தாக்குதல் குறித்து விரிவாக விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளது. (ம)

## மடு சென்ற

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லொறி கார், மற்றும் வாகனங்களின் உதிரிப்பாகங்களை வன்னிக்கு எடுத்துச்செல்வதற்கு பாதுகாப்பு படையினரின் அனுமதி வழங்குவதில்லை இதனாலேயே மடுவுக்குச் சென்ற வாகனங்களில் மேலதிகமாக இருந்த ரயர், ரியூப்,பற்றிகள் மற்றும் கண்ணாடிவகைகள் அவற்றின் உண்மைப் பெறுமதியை விட மூன்றுமடங்கு பணம் கொடுத்து வாங்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் நூற்றுக்குமேற்பட்ட வாகனங்கள் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்று மடுவுக்கு பக்தர்களை ஏற்றி வந்தன இந்த வாகனங்களின் உதிரிப்பாகங்களே இவ்வாறு விற்பனை செய்யப்பட்டது. பின்னர் வாகனங்கள் திரும்பிச் சென்றபோது அவற்றின் சாரதிகளை இராணுவத்தினர் தீவிரவிசாரணைக்குட்படுத்தினர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ம

## விமானம்...

மேற்படி விமானம் நிலத்தில் வீழ்ந்து பாரியசத்தத்துடன் வெடித்துச் சிதறி எரிந்ததால் அருகில் இருந்த மக்கள் கூக்குரல் இட்டவாறு தப்பியோடியதாகவும் அதன் பின்னர் பொலிஸ் நிலையத்திற்கு தகவல் கொடுத்து பொலிசார் வந்தபின்னர் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குக்கீழ் கொண்டுவந்ததாகவும் தெரிவித்துள்ளனர்:

(வ)

## மிக், 27 ரக

விமானம் தீப்பற்றி எரிந்தமையினால் விமானம் எரிந்து உருக்குலைந்த நிலையில் காணப்பட்டது: இதன் போது கொல்லப்பட்ட விமானியின் சடலம் சிதறிய நிலையில் மீட்கப்பட்டது:

இந்த விமான விபத்தை அடுத்து கட்டுநாயக்கா சந்தியில் இருந்து துறைமுகச் சந்தி வரை வீதிப் போக்குவரத்து தடை செய்யப்பட்டிருந்தது.

விபத்துக்குள்ளான விமானம் பயிற்சியில் ஈடுபட்டிருந்தது என்று இலங்கை வானொலியும், குண்டு வீச்சுத்தாக்குதலுக்குப் புறப்பட்டுச் சென்றதாக வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்றும் தகவல் வெளியிட்டுள்ளன.

இவ்விமானவிபத்து தொடர்பான விசாரணைகள் குற்றப் புலனாய்வுப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன:

இதனை விட விமானப் படை தலைமையகம் நால்வர் கொண்ட விசாரணைக் குழுவை நியமித்துள்ளது:

ஏயார் மார்சல் ஜி; ஜி. பெரேரா இவ் விசாரணைக் குழுவிற்கு தலைமை தாங்குகிறார். (வ-7 8.4)

## இரசாயன

மன்ற உறுப்பினர்கள் ஒன்று கூடி கண்டனம் தெரிவித்துள்ளனர்:

தமிழர் விடுதலைக்கூட்டணியின் காரியாலயத்தில் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவர் வீ. ஆனந்தசங்கரி தலைமையில் நேற்று எதிரணித்தமிழ்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூடியே இக்கண்டனத்தைத் தெரிவித்துள்ளனர்:

இக்கண்டனத் தீர்மானம் தொடர்பாக ஐக்கியநாடுகள் ஸ்தாபனத்திற்கும், ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் இரசாயன தடை ஆணைக்குழுவுக்கும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைக் குழுவிற்கும் முறைப்பாடுசெய்வதென்றும், இதுபற்றி இலங்கையில்உள்ள தூதுவர்களைச் சந்தித்து விளக்குவதென்றும் தீர்மானித்துள்ளனர்.

இக்கூட்டத்தில் 13 தமிழ், முஸ்லிம் எம்.பிக்களான பி. பி,தேவராஜ், எ,எஸ் செல்லச்சாமி, எ.எச்.எம்.அஸ்வர் பெ.சந்திரசேகரன், அப்துல் மஜித், மாவைசேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன், ஜோசப் பரராஜசிங்கம், பி.செல்வராஜா, ஜே. ஆர்.குகனேஸ்வரன், த: மகேஸ்வரன், விநோதலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்: (வ)

## தப்பியோடிய கைதிக்கு 3 வருட கடூழியச்சிறை
### யாழ் நீதிவான் தீர்ப்பு

[யாழ்ப்பாணம்]

சிறையில் இருந்து தப்பியோடியமை, மற்றும் சிறைச்சாலை உத்தியோகத்தர்களை தாக்கிய குற்றங்களுக்காக வசந்தராசா சுதாகரன் என்பவருக்கு யாழ் மாவட்ட நீதிபதி இ த. விக்னராஜா மூன்று வருடகடூழியச்சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளார்.

மல்லாகம் பருத்தித்துறை நீதிமன்றில் திருட்டுக்குற்றத்துக்காக ஒன்பதுமாத கடூழியச்சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுதண்டனையை அனுபவித்து வரும் போது, கடந்த மாதம் 18ந் திகதி யாழ்சிறைச்சாலையில் இருந்து தப்பியோடிய பிரஸ்தாப நபர், தப்பிச் சென்ற காலத்தில் மேலும் பல திருட்டுக் குற்றங்களைப் புரிந்ததுடன் கைது செய்யச் சென்ற சிறைச்சாலை அதிகாரிகளையும்தாக்கியுள்ளார்இதனையடுத்துமானிப்பாய்பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு யாழ் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போதுசுதாகரன்தனது குற்றங்களை ஒப்புக் கொண்டார்,

இதனையடுத்தே நீதிவான் குற்றவாளிக்கு 3வருட கடூழியச் சிறைதண்டனை வழங்கி தீர்ப்பளித்துள்ளார்

(இ)

## யாழ்.மா.சபையின்

விப்புப்பலகைகளும் அடித்து நொறுக்கப்பட்டன; கட்டிடத்தை நோக்கி கல்வீச்சும் நடாத்திய மேற்படி கோஷ்டி இந்துவிடுதியின் வளவிற்குள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மாநகரசபை ஊழியர்கள் மற்றும் தொண்டர்களின் துவிச்சக்கர வண்டிகளையும் அடித்து நொறுக்கினர். இதனால் இந்துவிடுதியின் கூரை சீற்றுக்கள் உடைந்து நாசமாகின.

இதற்கு முன்னதாக யாழ் மாநகர மேயர் என்; ரவிராஜ் கச்சான்கொட்டப்பட்ட சம்பவத்திற்கு வருத்தம் தெரிவித்ததுடன், கச்சான் கொட்டப்பட்டதால் ஏற்பட்ட நட்டத்தைத் தருவதாகக் கூறியிருந்தபோதிலும் இளைஞர் கோஷ்டி மேற்படி சம்பவத்தில் ஈடுபட்டதாகத்தெரிவிக்கப்படுகிறது

இது இவ்வாறிருக்க நேற்று இரவு, நல்லூர் வீதியில் இரண்டு இளைஞர் கோஷ்டிகளுக்கிடையே மோதல் இடம் பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ந)

## உடரட்டமெனிக்கே

சிலர் தடம்புரண்ட ரயில் பெட்டிகளினுள் சிக்குண்டு இறந்திருக்கலாம் என அச்சம் தெரிவிக்கப்படுகிறது

இதன்போது கடும்காயங்களுக்குள்ளானவர்களில் 45 பேர் குருநாகல் வைத்தியசாலையிலும் 35பேர் அளவை வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்து தொடர்பான உடனடி விசாரணைக்கு ரயில்வே திணைக்களம் உத்தரவிட்டுள்ளது. (8

## கறுப்புப் பெட்டி மீட்பு

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமானத்தளத்திற்கு அருகாமையில் இடம்பெற்ற விமானவிபத்தின்போது விமானத்தில் உள்ள 'கறுப்புப்பெட்டி' கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

விமானம் விபத்துக்குள்ளானதை அடுத்து விமானம் விழுந்து நொருங்கிய இடத்தை சோதனையிட்ட பொலிசார் விமானத்தில் இருந்த கறுப்புப்பெட்டியை கண்டெடுத்துள்ளனர்.

[வ]

## இளைஞன் காலிழப்பு

(யாழ்ப்பாணம்)

மாடு கட்டச் சென்ற இளைஞர் ஒருவர்மிதிவெடியில்சிக்கி இடது காலைஇழந்துள்ளார். நேற்று இடம் பெற்ற இச் சம்பவத்தில் ஏழாலை மத்தியைச் சேர்ந்த குணரட்னம் ஜபவதன் (வயது 20) என்பவரேகாலைஇழந்தவராவார்.

(ந)

## ராசிக்குழு சார்ஜன் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கன்னன்குடாப் பகுதியில் ராசிக்குழு சார்ஜன் ஒருவர் சுட்டுக் கொலைசெய்யப்பட்டுள்ளார்

நேற்று நடைபெற்ற இச் சம்பவத்தில் ராசிக்குழு சார்ஜனான எஸ் மேகநாதன் என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார். புலிகள் மீது தாக்குதல் நடத்துவதற்காக பதுங்கி இருந்த இக்குழு மீதே இத்தாக்குதல் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது; இறந்தவரின் ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது; (ந-4)

## இராஜினாமாச்

பதவியில் இருந்து விலக்குவதாயின் விலக்கட்டும். அமைச்சர் ரவூப் ஹக்கீமை பதவி விலக்கியதில் இருந்து ஜனாதிபதி நல்ல பாடம் படித்திருப்பார் என்று நினைக்கிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

இதே கருத்தை அமைச்சர் மகிந்தவிஜயசேகராவும் தெரிவித்துள்ளார்: இதே வேளை அமைச்சர்அலவி மௌலானா, அமைச்சர் றெஜிரணதுங்கா ஆகியோர் திகதியிடப்படாத இராஜினாமாக் கடிதங்களை வழங்கவுள்ளனர்; (வ)

30 ஆண்டு காலமாய் குன்றாத தரம் வாய்ந்த
சுகாதார முறைப்படி உணவிற்கும் வைத்தியர்களுக்கும்
விஷேசமாக தயாரிக்கப்பட்டது;
சுத்தமான
வி.எஸ்.பி, நல்லெண்ணெய்
தயாரிப்பாளரும் ஏகவிநியோகஸ்தரும்
பரிமளா ஸ்ரோர்ஸ்
26A, மானிப்பாய் வீதி, யாழ்பாணம்.
(கி-1986)

இப் பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தாரால் இல: 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது!